ஆ[illegible]ழுச்சி நூற்கள் – 2

# வெற்றியுனதே

தமிழ் நாட்டு வாலிபர்களை உறக்கத்தினின்றும்
எழுப்பி ஊக்கம் கொண்டு உழைக்கத்
தூண்டும் நூல்

ஸ்ரீ சிவகுருநாத [illegible]
[illegible]

கோ. நடேசய்யர்.

ரூ 1/-

அகவெழுச்சி நூற்கள். 2,

# வெற்றியுனதே!

தமிழ் நாட்டு வாலிபர்களை உறக்கத்திலிருந்து
தட்டி யெழுப்பும் நூல்.

கணக்குப் பதிவு நூல், கணக்குப்பரிசோதனை, ஆயில்
எஞ்ஜின், இன்ஷியூரன்ஸ், நீ மயங்குவதேன்,
முதலிய நூல்களை இயற்றியவரான

திரு. கோ. நடேசய்யரவர்கள்
இயற்றியது

தினத்தபால் பிரஸ் கொழும்பு,

பதிவு செய்யப் பெற்றது — 1934 — ரூ. 1.

முகவுரை, முன்பக்கம் இ-தபால் பிரஸ் கொழும்பு.
பிறபகுதி முழுவதும், சகோதரி பிரஸ் அட்டன்.

# பொருளடக்கம்


| அத்தியாயம் | பக்கம் |
|---|---|
| 1 பொருளொன்றல்ல-வாழ்க்கையின் நோக்கம் | 1 |
| 2 அச்ச மென்பதில்லையே! | 4 |
| 3 தன் நம்பிக்கை யில்லான் பிறர்உதவி பெறான் | 20 |
| 4 கவலைப்பட வெட்கப்படு | 32 |
| 5 இடமுண்டேல் இடமுண்டு | 39 |
| 6 விதை யொன்று போட செடியொன்று முளையா | 52 |
| 7 காலந்தவறின் யாவுந் தவறும் | 62 |
| 8 பொறுத்தார் பூமியாள்வார் | 74 |
| 9 உனது மனச்சாட்சி என்ன சொல்லுகிறது? | 85 |
| 10 வெற்றிபெற்றமுறை | 95 |

அகவெழுச்சி நூற்கள்—1

# நீ மயங்குவதேன்?

திரு. கோ. நடேசய்யரவர்கள் இயற்றியது

இதுவரையில் தமிழில் வெளிவராத நூல். தமிழ் நாட்டு வாலிபர்கள் பல நொண்டிக் காரணங்களைச் சொல்லித் தங்கள் காலத்தைப் போக்கி வருவதைத் தடுக்கவே இந்நூல் எழுதப் பெற்றுள்ளது. மிகவும் எழ்மைத் தனத்திலிருந்து, எவ்விதம் அநேகர் தங்கள் முயற்சியாலும், மனோ திடத்தாலும் முன்னேறி யிருக்கிறார்கள் என்பதை இந்நூலிற்காணலாம். புஸ்தகம் படித்து முடியுமுன், அழுதுகொண்டிருந்த சோம்பேறிகளும் வீறுகொண்டு எழுந்து தங்கள் முன்னேற்றத்தைக் கருதி உழைப்பார்கள் என்பது நிச்சயம்.

விலை ரூ 1

கிடைக்குமிடம்:—

கோ. நடேசய்யர்,

லேக் ஹவுஸ், கொழும்பு

(சிலோன்)

## முகவுரை

தமிழில் அகவெழுச்சி நூற்கள் என சில சிறு புஸ்தகங்கள் வெளியிட வெண்ணி முதற் புத்தகமாக "நீ மயங்குவதேன்" என்ற நூல் ஒன்று வெளியிட்டோம். அதன் இரண்டாம் புஸ்தகமாக இந்நூலை வெளியிட்டிருக்கிறோம். ஒருவன் தனது வாழ்க்கையில் வெற்றி பெறுவான் என்று சொல்ல வேண்டின் அவனுக்கிருக்க வேண்டிய குணங்கள் யாவை, அவற்றை அடைவது எவ்விதம் என்பதை இந்நூலிற் காணலாம்.

சோம்பலினின்றும் கிளப்பி ஊக்கங்கொண்டு உழைக்க தமிழ்நாட்டு வாலிபர்களைத் தூண்ட இந்நூல் உபயோகப்படுமானால் அதுவே நாம் கொண்ட சிரமத்திற்குப் போதிய கைம்மாறாகும்.

கொழும்பு,
25-8-34

இப்படிக்கு,
கோ. நடேசய்யர்

தமிழ்நாட்டில் இதுவரையில் அறிந்திருக்க முடியாத
பல உண்மைகள் கொண்ட நூல்

## புபேந்திர சிங்கன்
அல்லது
### நரேந்திரபதியின் நரகவாழ்க்கை

பாட்டியாலா மகாராஜா செய்த அக்கிரமங்களை இராஜப் பிரதிநிதிக்கு அந்நாட்டுக் குடிகள் தெரிவித்துக் கொண்ட மனுவில் கண்ட விஷயங்களைப்பற்றி சுதேச சமஸ்தான பிரஜையின் மகாநாட்டார் நியமனம் செய்த கமிட்டியார் விசாரணை செய்து, சாட்சியங்களுடன் வெளியிட்ட யாதாஸ்து. இதுவரையில் தமிழில் வெளிவராதது நாம் எவ்வித ஆட்சிக்குள்ளாயிருக்கிறோம் என்பதை வெளியிடும் நூல். இது நாவல் அல்ல.

விலை ரூ 2-00

கிடைக்குமிடம்:—
கோ. நடேசய்யர்
லேக் அவுஸ்
கொழும்பு

# வெற்றியுனதே!

## 1வது- அத்தியாயம்

### பொருளொன்றல்ல-வாழ்க்கையின் நோக்கம்

தோன்றிற் புகழொடு தோன்றுக - அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று (வள்ளுவர்)

**வா**ழ்க்கையில் ஒருவன் வெற்றிப் பெற்றானா, அல்லவா என்றறிய வேண்டின் அவனுடைய லட்சியம் என்னவென்பதை முதலில் அறிய வேண்டும். பணக்காரனாக வெண்ணிய ஒருவன் பொருள் தேடிப் பணக்காரனானாற்றான் அவன் வெற்றிப் பெற்றவனாவான். ஆகவே, உனது வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமென வெண்ணினால் உனது நோக்கம் என்னவென்பதைத் திட்டஞ் செய்து கொள்ளல் வேண்டும். யாதொரு லட்சியமுமில்லாமல் காலந் தள்ளுவாயானால் நடமாட்டம் அதிகம் உள்ள பாதையில் நடக்கும் குருடன் எதிர் வருபவர் மேல் வீழ்ந்து வீழ்ந்து துன்பப் படுவது போலாவாய். இந்நிலையில்,

உன் லட்சியந் தான் என்ன? இது செய்வேன், என் வருங்காலம் இவ்விதமிருக்க வேண்டும் என்ற முடிவு உனக்கு இன்னம் ஏற்படவில்லையா? அதைப் பற்றி நீ யோசிக்கவில்லையா? யோசிக்க உனக்கு அவகாசம் கிட்டவில்லையா? என்?

நடப்பது நடந்தே தீரும் என்று ஆற்றின் பிரவாகத்தின்வழியே செல்லும் படகே போல் உன் வாணாளைக் கழிக்க எண்ணி விட்டாயா?

உலகமே ஒரு பெரு பெருங் கடல். உனது வாழ்க்கை அதில் ஓர் கப்பல். அக்கப்பலை ஓட்டும் மாலுமி நீ. கப்பல் சேரவேண்டிய இடமே உனது வாழ்க்கையின் லட்சியம். இத்துறை சேரவேண்டும் என்ற திட்டமில்லாத மாலுமியின் நிலை எவ்விதம் கடலில் இருக்குமோ, அது போல் லட்சியமில்லாத உன் வாழ்க்கை யிருக்கும். இந்த விடம் போக வேண்டும் என்ற நிலை யறியாது திகைத்து நிற்கும்; அல்லது காற்றில் அங்குமிங்கும் அல்லற்பட்டு மூழ்கி மடியும்.

யாவருக்கும் பலன் இல்லாமலும், தோன்றிய அறிகுறியில்லாமலும் தோன்றித் தோன்றி மறையும் சிருஷ்டிகளைப் போல் நீயும் ஒருவனாகக் காலங் கழித்துப் போக எண்ணிவிட்டாயா? அல்லது மலையுச்சி விளக்கே போல் யாவருங் கண்டு கொண்டாடக் கூடியதும், பிறர் பற்றி வழி நடக்கக் கூடியதுமான உயர் நிலைக்கு வர எண்ணியுள்ளாயா? உனது நோக்கந்தான் என்ன? உயிர் வாழ்வின் நிமித்தம் ஒருவன் தினந்தோறும் 24ல் 20 மணி நேரம் வரையில் செலவு செய்ய வேண்டிய கொடுமையான நிலைக்கு உலகம் வந்து விட்டதென்பதை நீ உணர்வாய். நாகரீகம், நாகரீகம் என மனிதன் தனது தேவைகளை யெல்லாம் பெருக்கிக் கொண்டதன் காரணமாய் அவனுக்குத் துன்பங்களே அதிகப்பட்டுக் கொண்டு வருவதென்பது முண்மை!



துறவு பூண்ட ஒருவன் தன் சிறு கந்தையைக் காப்பாற்றும் நோக்கமாய்ப் பெருங் குடும்பத்தைத் தேடித் துன்பப்பட்டது போல் தற்கால நாகரீக வாழ்க்கை யுள்ளதென்பதை யாவரும் உணர்வார்கள். எனினும் அந்தக் கட்டை அவிழ்க்குஞ் சக்தி அநேகருக் கில்லை. தன் பிள்ளை, தன் வீடு, தன் பசி எனக் குறுகிய சுற்றத்திற்கே தேடிக் கொடுக்கும் நிலை ஒருவனுக்குப் பெரிதாகி விட்டது! அக் காரணம் பற்றி அவன் கடவுளையும் மறக்கிறான். உற்றார் உறவினர்களையும் வெறுக்கிறான். நாட்டைத் துறந்து தன் சாதி சனங்களையும் விட்டகலுகிறான். பொது நிலை அவ்வித மிருக்க உனது நிலை என்ன?

உன்னையும் உனது சுற்றத்தாரையும் விட்டு உனது நோக்கம் பரவுகிறதா? அது விசாலப்பட முயற்சிக்கிறாயா? அப்படியானால் எத்துறையில் விசாலப்பட எண்ணுகிறாய்.

ராதஸ் சைல்ட், ஹென்றி போர்ட் போன்ற கோடீஸ்வரர்களாக எண்ணுகிறாயா?

நெப்போலியன், வெலிங்டன், சிவாஜி, சிவதாஸ் ராவ் போன்ற யுத்த வீரர்களாக எண்ணமா?

கம்பன், காளிதாஸன், ரவீந்திரநாதர், பாரதி போன்ற கவிஞர்களாகத் தோன்ற நோக்கமா? அல்லது,

பாரடே, எடிசன், போஸ், ரே, வெங்கட்ராமன் போன்ற பெரும் சாஸ்திர நிபுணர்களாக எண்ணமா? அல்லது,

புத்தர், மத்வர், சங்கரர், தாயுமானவர், இராமகிருஷ்ண பரம ஹம்சர் விவேகானந்தர் போன்ற பெரும் மத போதகர்களாகக் கிளம்ப யோசிக்கிறாயா?

"எல்லோரும் இன்புற்றிருப்பதுவே யல்லாது வேறு ஒன்று மறியேன்" எனத் தன் சமூகத்தினதும், தன் தேசத்தினதும் முன்னேற்றம் கருதி உழைத்தவர்களும், உழைப்பவர்களுமான, கவுண்ட் டால்ஸ்டாய், மகாத்மாஜி போன்ற உலக சிரேஷ்டர்களாக எண்ணமா? எத்துறையில் யாரைப் பின்பற்ற யோசிக்கிறாய்?

"பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்" பொருளையே தேடுவது உனது நோக்கமாய்க் கொள்வாயானால் அது தற்கால நாகரீகத்திற்குப் பொறுத்தமா யிருக்கலாம்.

"பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை" என்பது தற்காலத்திற்கு ஒருவாறு பொருந்தும். உலக வாழ்க்கையில் நின்றுழல் வோருக்குப் பொருள் ஒருவாறு அவசியமென்பதை ஒப்புக் கொள்ள வேண்டியதே! ஆனால் பொருள் தேடுவதே ஒருவனுடைய வாழ்க்கை லட்சியமாக விருக்கலாமா? ஒருவன் தனது வாழ்க்கையில் தேடற்குரிய தேட்டம் பொருள் மாத்திரந்தானா வென்பது ஆராயத்தக்க விஷயம்.

தனது வாழ்க்கையில் வெற்றியடைந்தானா அல்லவா என்று சீர்தூக்கிப்பார்க்க, அவனவன் தேடியுள்ள பொருளையே அளவு கோலாகக் கொள்ளும் வழக்கம் உலகத்தாருள் அமைந்துள்ளது என்பதுண்மை! அவ் வழக்கம் சரியானது



மல்ல, பொறுத்தமானதுமல்ல. பொருள் ஓர் சாதனமேயல்லாது லட்சியமல்ல.

பொருளே ஒருவனுக்கு வியாதியாய்ப் பீபிக்கிறது. தான் துன்பப்படுவதுமல்லாமல் அதனைத் தேட அநேகரையும் துன்பப் படுத்துகிறான். நியாயம் என்பதையே மறக்கிறான். எக்காரணம் காட்டியும், எவ்வழி நாடியும் தான் பொருள் தேடினாற் போதும் என்ற தீர்மானத்தையே கொள்கிறான்.

பொருளென்னும் பேய் அஃதில்லாதவனை மாத்திரம் பீடிக்கிறது என்றெண்ண வேண்டாம். இல்லாதவனுக்குள்ள பொருளாசையை விட அஃதுள்ளவனுக்கு அதிகம் உண்டென்பதை நாம் சொல்லத் தேவையில்லை. அப் பேராசை காரணமாய் உலகம் துன்பக் கடலில்மூழ்கி, ஏழைகள் புரட்சி செய்யவும் தலைப்பட்டு விட்டார்கள். இது ஒரு புறமிருக்க,

தனது வாழ்க்கையில் வெற்றிபெற, தன் லட்சியத்தையடைய ஒருவன் பொருள் தேடித்தான் ஆகவேண்டுமென்பதில்லை. உண்மை நிலையறியாதார் பொருளையே பெரிதாகக் கொண்ட போதிலும் அறிவுடைய உலகம் அதனை ஏற்பதில்லை.

உலக சரித்திரத்தைக் கவனி. மிகவும் ஏழ்மையிற் பிறந்து வளர்ந்தவர்கள் உலகத்தையே மாற்றி வைத்திருப்பதை யறிவாய். யேசு நாதர் யார்? ஏழ்மையிற் பிறந்து, ஏழ்மையில் வளர்க்கப் பெற்ற ஓர் யுதச் சிறுவர் தானே! இரண்டு மூன்று வருஷங்கள் கழிய அச் சிறுவன் சொல்லிய வார்த்தைகள் உலகத்தில் ஓர் பெரும் மதத்தை ஸ்தாபிக்கவில்லையா?

உலகத்தவருள் பெரும்பான்மையோர் அவரைப் பின் பற்றிப் பூசித்து வரவில்லையா? அவரது உயர்நிலை பொருளைக் கொண்டா ஏற்பட்டது?

அஹிம்ஸா தர்மத்தை உலகத்தவருக்கு உபதேசித்த புத்த பிரான் நிலைமை யென்ன? அரசராய்ப் பிறந்தும், தன் செல்வம், சுற்றம், அரசுரிமை முதலியவற்றை யெல்லாம் துறந்த பிறகே மேன்மை பெற்றார். 50 கோடி ஜனங்களால் பின் பற்றப் பெற்று வரும் ஓர் பெரும் மதத்தை துறவு பூண்ட பிறகல்லவோ ஏற்படுத்தினர்? தனது செல்வமும், அரசும், சுற்றமும், தன்னை முன்னேற விடாமல் தடுக்கும் கட்டுகள் என்றல்லவோ வெண்ணி அவற்றை விட்டு வெளியேறினர்.

பற்பல நாடுகளிலும், பற்பல காலங்களிலும், ஏழைகளே பெரும் பெருங் காரியங்களை எற்றுச் சாதித்திருக்கின்றனர் என்பதை நீ அறிவாய்!

இத்தாலியா நாட்டில் ஓர் சிறு கிராமத்தில் ஓர் ஏழைக்குடியிற் பிறந்த நெப்போலியன் என்ற சுத்த வீரன் முன் எவ்வளவு முடிகள் சாய்ந்தன! எவ்வளவு நாடுகள் படிந்தன? ஐரோப்பிய உலகம் அவனைக் கண்டு எவ்வளவு நடுக்கம் கொண்டதென்பதை நீ அறியாயோ! அவன் தேடிய பொருள் என்ன?

பிரிட்டிஷ் காரர்களுக்கு உலக ஆதிக்கத்தைத் தேடிக் கொடுத்த நெல்சன் என்பார் ஓர் ஏழை தானே? பலவித சூழ்ச்சிகளால் பிரிட்டிஷ் காரர்களுக்கு இந்தியாவை உரிமையாக்கிக் கொடுத்த 'கிளைவ்' அடங்காப் பிடாரியாய்த் தெருவில்



விளையாடிக் கொண்டிருந்த ஏழைச் சிறுவன் தானே? அவன் தேடிய பொருள் எவ்வளவு?

இத்தாலியா நாட்டிற்குச் சுதந்தரம் தேடிக் கொடுத்த மஜினி என்ற சுத்தவீரன் பெரும் ஏழைத்தானே!

மில்டன், கோல்ட் ஸ்மித், ஜான்ஸன் போன்ற ஆங்கில கவிஞர்கள் உண்ண உணவும் உடுக்க உடையும் இல்லாது கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தவர்கள் தானே! அவர்களது புகழ் இன்னம் அழியாதிருக்கவில்லையா?

ஔவை, கம்பன், காளிதாஸன், காளமேகம் போன்ற கவியரசர்கள் கூலிக்குப் பாடிக் காலங்கழித்து வந்திருந்த போதிலும், தமிழ் உலகம் அவர்களை மறக்கவில்லையே! அவர்கட்குப் பின் தோன்றிய அநேக அரசர்கள், கோடீஸ்வரர்கள் முதலியோரின் பெயர் ஒருவருக்குந் தெரியாது மறைந்து விடவில்லையா?

நமது தென்னாட்டு வீரகவி சுப்பிரமணிய பாரதி தரித்திரக் கடலில் மூழ்கி இறந்த போதிலும் அவருடைய பாடல்கள் தமிழனுக்குப் புத்துயிர் கொடுக்கவில்லையா?

பரம ஏழையாயிருந்த "காரல் மார்க்ஸ்" என்பவரின் கொள்கைக்ள் தானே தர்காலம் ருஷ்யாவை யாண்டு வருகிறது! பெரும் நிதியும், பெரும் பராக்கிரமும் கொண்ட சார் சக்கிரவர்த்திகள் ஆண்டுவந்த ருஷ்யாவைத் தற்காலம் ஏழைகள் தானே ஆண்டு வருகிறார்கள்? லெனின் என்னும் ஏழைத் தற்சகாலம் ருஷ்யாவில் தெய்வமாகக் கொண்டாடப் பெற்று வரவில்லையா?

ஸ்ரீ சிவகுருநாத குருபீடம்
...மடம், யாழ்ப்பாணம்.

வறுமையென்னும் வெடிகுண்டிட்ட பல நாடுகளையும், பிளந்து கிழித்தெரிந்து, உருத்தெரியாமல் செய்து வருகிறது. வறுமையின் தளகர்த்தர்களே உலகத்தை யாண்டு வருகிறார்கள் என்பது மிகையாது.

பெரும் முதலாளிகளையுடைய பிரிட்டிஷ் நாட்டைப்பல வருஷ காலமாய் ஏழைக் கூட்டத்தவர்கள் தானே யாண்டு வருகிறார்கள். ராம்சே மக்டொனால்ட் பெரும் பணக்காரரா? பிலிப் ஸ்னோடன் யார்! ஏழைதானே! பணமா இவர்கட்குப் பெருந் தத்துவத்தைக் கொடுத்தது? ஒருவனுடைய உயர் நோக்கமும், வாழ்க்கை நெறியும் பொருளைவிட அதிகப் பலமுள்ளதென்பதை யறிவாய்!

நூல் நூற்கும் இயந்திரத்தைக் கண்டுபிடித்த ஹார் கிரீவ்ஸ் தரித்திரத்தில் இறந்தான். உலகத்தவர்கட்குப் பெரும் நன்மைகளைச் செய்து உலகம் போற்றும் நிலைமையில் இருந்தவர்கள் உண்ண உணவின்றி இறந்தவர்கள் பன்னூற்றுவருண்டு.

இங்கிலாந்தின் மந்திரியாயிருந்து புகழ்பெற்ற ஆஸ்குவித் மிகவும் தரித்திரப்பட்டிறந்தார் என்பதை அறியாயோ!

முப்பத்து முக்கோடி ஜனங்களுடைய அடிமைத் தனத்தைப் போக்கிச் சுகவாழ்வு தருவதாக உறுதிகொண்டு வெளிக்கிளம்பி வந்துள்ள மகாத்மா காந்தி ஓர் கோடீஸ்வரரா? அவரைக் கண்டு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு உடல் சிலுக்கவில்லையா; போதிய உடையும் இல்லாமல், தன் உடையைத் தானே செய்து கொள்ளும் இவ்வேழையைக் கற்றோரும், பாமரரும் உலக சிரேஷ்டர்'' என்று கைகூப்பித் தொழவில்லையா?



ஆயுதபலத்தால் உலகத்தையே ஜயித்துவிடலாம் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்த, ராணுவத்திமிர் கொண்ட நாட்டவர்கட் கெல்லாம், பலமற்ற இவருடைய சரீரம் ஓர் திகைப்பைக் கொடுக்க வில்லையா?

பலங்குன்றி அடிமையில் மூழ்கிக் கிடக்கும் சிறு நாட்டவர்களும், தாங்களும் சுதந்திரம் பெறலாம், அதை அடைவதும் அஹிம்ஸா தர்மத்தால் என்பதையறிந்து களிப்படையும்படிச் செய்தது இவ் வேழைக் காந்தி தானே?

கோடீஸ்வரர்களில் பலர் இவரது அடிபணிந்து நடக்கிறார்கள் என்பதை நீ யறியாயோ! இவற்றிற் கெல்லாம் ஆதாரம் இவர் தேடிய பொருளா? இல்லை. இல்லை.

பொருளுக்கோர் அளவுண்டு. அதனை அளக்க முடியும். அது அழியும். மகாத்மாவின் தியாகத்திற்கோ அவரது பொது ஊழியத்திற்கோ அளவில்லை. அவற்றை அளக்க முடியாது.

உலகத்திலுள்ள கோடீஸ்வரர்களை யெல்லாம் கணக்கெடுத்துப் பார்! முடி மன்னர்களையும் எடுத்துக் கொள். இவர்கள் உலக முன்னேற்றத்திற்காகச் செய்தவற்றையும், ஏழைகள் செய்துள்ளவற்றையும் கணக்கெடுத்துப் பார். எது மேலானது என்பதைக் கவனி. ஏழைகள் செய்த நன்மைகளே மேலானதென்பதை யுணர்வாய்! இவர்களுடைய தியாகத்தையும் உழைப்பையும், கவனிக்கையில் பெரு நிதி பெற்றோர்கள் செய்துள்ளவை மிகச் சொற்பமென்றே வெளிப்படும். ஆதலின்;

உனது வாழ்க்கையின் லட்சியம் என்ன வென்பதைத் திட்டம் செய்து கொள். பொருள் செய்வதே உன் நோக்கமா யிருக்கவேண்டு மென்பதில்லை. உலகத்தாருக்கு நன்மை பயக்குவதாய்க் கொள்ளும் எந் நோக்கமும் நன் நோக்கமே! அதைப் பெறவே நீமுயற்சிப்பாயாக.

நிலவரை நீள்புக ழற்றிற் புலவராய்
போற்றாது புத்தே ழுலகு (குறள்)

## 2வது- அத்தியாயம்

### அச்ச மென்பதில்லையே!

8 வயதுள்ள ஓர் சிறுவன் நள்ளிரவில் படுக்கையினின்று எழுந்து பெற்றோர்க்கும் தெரியாமல் காட்டின் நடுவேயுள்ள ஓர் குளக்கறையில் உட்கார்ந்து கொண்டு, அதில் மீன்கள் துள்ளி விளையாடிக் கொண்டிருக்கக் கண்டு களித்துக் கொண்டிருந்தான். படுக்கையில் மகனைக் காணாத பெற்றோர்கள் வீடெங்கும் தேடிப் பிறகு காட்டில் நுழைந்து பல விடங்களிலும் தேடி விடியற்காலத்தில் தங்கள் மகனைக் குளக்கறையில் கண்டனர். காட்டு மிருகங்கள் தங்கள் மகனை விழுங்கி விட்டனவோ வென்று பயந்திருந்த தாய்,

“ அப்பா மகனே ” எனக் கட்டித் தழுவி “ உனக்குப் பயமில்லையா? ஏன் இவ்விடம் வந்தாய்? ” என்று கேட்டாள்,

‘ பயம் என்றால் என்ன அம்மா? அது எப்படி யிருக்கும்” என்றான் அக்குழந்தை.

அக் குழந்தை யார் தெரியுமா? அவன் தான் நெப்போலியன் என்னும் சுத்த வீரன். அவ்வீரன் முன் உலகம் கலங்கவில்லையா? பயம் என்ன என்பது அறியாத சிறுவன் உலகத்தைச் சயிக்க முடியாதா? முடியும்! முடியும்!!

நாயைக் கண்டால் பயம். சிறு சிறு ஜந்துக்களைக் கண்

டாலும் பயம்! காட்டு மிருகங்களைக் கண்டாலும் கலங்குகிறோம். பக்கத்திலுள்ள மனிதரைக் கண்டாலும் பயந்தான்! பயம் என்றால் என்ன வென்பதைப் பற்றி யோசித்தாயா? நீ யேன் பயப்பட வேண்டும் என்பதைப் பற்றி ஆராய்ந்திருக்கிறாயா?

குழந்தைகள் அழுங் காலத்திலும், சாப்பிடமுறண் செய்யுங்காலத்தும், "பூனை வருகிறது, நாய் வருகிறது, இரண்டு கண்ணன் வருகிறான்" எனச் சொல்லிச் சொல்லிக் குழந்தைகளைப் பயம் என்னுங் கடலில் மூழ்கி உழலும்படிச் செய்து விடுகிறோம். குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் செய்யக் கூடிய மகா பாதகமான காரியங்களில் "பயம்" என்பதை யூட்டும் வழக்கமே முதன்மையானது. இருட்டில் போகாதே! வெளியில் போகாதே! மழையில் போகாதே எனக் குழந்தைகளை வீட்டில் உட்காரவைத்து வியாதியில் பழக்குகிறோம். குழந்தைகளை இவ்விதம் பழக்கும் முறை நமது நாட்டில் இருக்கும் வரை, நமது நாடு அடிமைத் தனத்தில் மூழ்காது என் செய்யும்?

'பயம்' என்பது என்ன வென்று சற்று யோசித்துப் பார். நடவாத ஓர் காரியம் நடந்ததாகவும், காணாத ஓர் விஷயம் கண்டதாகவும், அனுபவியாத ஓர் கஷ்டத்தை அனுபவிப்பது போலவும், ஒருவர் கொள்ளும் யெண்ணமே பயமெனக் கொள்ள வேண்டும்.

நாயினருகில் சென்றால் கடிக்கும். அது கடிப்பதால் தனக்குத் துன்பமுண்டாகும், நோய் உண்டாகும், அதனால் மாணம் சம்பவிக்கும் என்ற எண்ணமே ஒருவனை நாயிடம் போ



காமற் செய்கிறது. நாய் கடிக்கவுமில்லை. கடித்ததால் ஏற்படும் உபத்திரவத்தை அனுபவிக்கவுமில்லை அப்படியிருக்க, நடவாத காரியத்தைப் பற்றிச் சிந்தித்துச் சிந்தித்து அவஸ்தைப் படுவது பேதமையன்றோ! பயம் ஒருவனுடைய குணத்தை மாற்றுகிறது. அது அவனை அடிமையாக்குகிறது. அவனது ஆசையைக் கெடுக்கிறது. அவனது முன்னேற்றத்தைத் தடுக்கிறது. வியாதியை யுண்டாக்குகிறது. சந்தோஷத்தைப் போக்கி மனத்தைக் கலக்குகிறது.

பயம் என்பது ஓர் பேய். அப் பேய் ஒருவனைப் பிடிக்குமானால் அவனை நடைபிணமென்றே சொல்ல வேண்டும். அவன் பிறன் கை இயந்திரமாகிறான். தன் நம்பிக்கையிழக்கிறான். சந்தோஷ உலகத்தில் அவனைக் காணமுடியாது. கிழத் தன்மையைச் சீக்கிரம் அடைகிறான்.

சந்தோஷமும் பயமும் ஓர் வீட்டில் நில்லா. பயமும் சுதந்திரமும் விரோதிகள். ஒருவனைப் பிறனுக்கு அடிமையாக்குவது பயமே! பலர் ஒருவன் கீழ் அடிமைப் பட்டு வாழ்கிறார்கள் என்றால் அவர்கள் அவனிடம் கொண்டுள்ள பயமே அதற்குக் காரணம் என்பதை யறிவாய்.

திடீரென ஒருவனுக் கேற்படும் பயத்தால் அவனுடைய நரம்பு, தசை, ரத்தம் முதலியவற்றில் சடுதியான மாறுதல்கள் ஏற்படுமென்று சாத்திர விற்பன்னர்கள் சொல்லுவார்கள். திகைப்பு, கலக்கம், ஏக்கம், அச்சம், பயம் என்று பயத்திற்குப்

பல அளவுகள் இண்டு. சிலவற்றைப் பிறர் கண்டுபிடிக்க முடியும். பிற கண்டுபிடிக்க முடியா. அவை, மனிதருள் அமுக்கி நின்று அவர்களது மனோ நிலையை ஆட்டுவித்துக் கொண்டேயிருக்கும். பயத்தின் அளவு அதிகமெனினும் குறைவெனினும், அது சரீரத்தில் செய்யக் கூடிய மாறுதல்கள் ஒன்றுதான்.

வளரும் குழந்தைகளுள் பயமென்னும் பேயைக் குடியிருக்க விட்டு அவர்களுடைய வருங்கால வாழ்க்கையை அடியோடு அழித்து விடுகிறார்கள் பெரும்பான்மையான பெற்றோர்கள். கரப்பான் பூச்சிகளைப் போல் தீங்கற்ற பூச்சிகளைக் கண்டு துள்ளிக் குதித்து நடுநடுங்கும் பலரைக் காண்கிறோம். அவர்கட்கு எவ்விதம் அவ்வழக்கம் ஏற்பட்டிருக்கும் என்பதை யோசி! அவர்களது பெற்றோகள் அவர்கட்குச் செய்த தீங்கு அதுவே.

பலமற்று, செயலற்று, நடுநடுங்கிக் கொண்டு, சோம்பலுள்ள பல சிறுவர்களை நாம் தினந்தோறும் காண்கிறோம். அவற்றிற்கெல்லாம் காரணம் என்னவென்பதை ஆராயுங் காலத்தில் உண்மை விளங்கும். ஓடி நடமாடுங் காலங்களில் அவர்களை "அங்கு போகாதே, இங்கு வராதே, இது இடிக்கும், அது கடிக்கும், அதைச் செய்யாதே, இதைச் செய்யாதே" என்று சொல்லிச் சொல்லி அவர்களது பெற்றோர்கள் தடுத்து செய்யக் கூடிய வற்றையும் செய்யாது விடுத்து, பலனற்ற குழந்தைகளாய் வளர்த்திருப்பதை யறிவாய்.



தூங்க வைக்குங் காலத்தும் குழந்தைகளுக்குப் பயம் காட்டித் தூங்கவைக்கிறார்கள். தூங்குங் காலத்தில் சொல்லும் சொற்கள் குழந்தைகளது மனதில் மிகவும் நன்றாய் ஊற இடம் ஏற்படுகிறது. குழந்தைகளைப் பயமுறுத்துவதால் ஏற்படக் கூடிய பெருந் தீங்குகளைப் பற்றிச் சொல்லுங் காலத்தில் மனோதத்துவ சாத்திர நிபுணர் லீனோ பெரியானி என்பவர் பின் வருமாறு சொல்லுகிறார். "சுபாவமாய்ப் பயங்கொண்டவும் செயலற்றவு மாயுள்ளவர்களில் 100 க்கு 88 க்கு அதிகமானவர்கள் காலா காலத்தில் நற்போதனைகளுடன் வளர்க்கப் பெறுவதால் நல்ல நிலைமைக்குக் கொண்டுவரப் பெற்றிருக்கலாம் என்பதை நான் 20 வருஷ ஆராய்ச்சியின் பயனாய்க் கண்டுள்ளேன்"

'நெருப்பு சுடும் அருகில் செல்லாதே' என உண்மையான வற்றைச் சொல்லி பயமுறுத்துவது ஒருபுறமிருக்க, சம்பவிக்கக் கூடாத வற்றையும் சொல்லிப் பயறுத்துவதையுங் காண்கிறோம். "தூங்காவிட்டால் உன்னைப் பிள்ளைத் திருடன் தூக்கிப்போவான்", "புலிவந்து உன்னைக் கொண்டுபோகும்" என்று சொல்லி எதைக்கண்டும் பயப்படும் படியாய்க் குழந்தைகளைப் பழக்கிவைக்கிறோம். என் செய்யலாம்!

தங்கள் கண்பார்வையில் இல்லாத சமயம் தங்கள் தங்கள் குழந்தைகளுக்கு எவ்வித ஆபத்து நேருமோ எனப் பயந்து காலந்தள்ளும் தாய்மார்களைத் தினந்தோறும் காண்கிறோம். வெளிச்சமில்லாத அறைக்குள் பிள்ளைகள் சென்றால் பிசாசுகள்

விழுங்கி விடுவதாகவும், குளத்தினருகில் சென்றவுடன் அதில் வீழ்ந்து மூழ்குவதாகவும், பந்து விளையாடச் சென்றால் கை கால் முறிந்து அவர்களைத் தூக்கிக்கொண்டு வருவதாகவும், வெயிலில் போய் சுரங்கண்டு அவர்கள் அவஸ்தைப் படுவதாகவும், பகற் கனவு கண்டு தாய்மார்கள் அவஸ்தைப் படுவதையும் காண்கிறோம்.

பயம் என்னும் மயக்கத்தில் இவ்விதம் வளர்க்கப் பெறும் பிள்ளைகள் பெரிய மனிதர்களானால், அவர்களால் நாடு முன்னேற்ற மடையுமா?

நாளை நிலை என்ன வருமோ என்று ஏக்கங் கொண்டு தினந்தோறும் படுக்கைக்குப் போகும் பல்லாயிரக் கணக்கான ஜனங்களைக் காண்கிறோம். நாளைக்கு அது கிடைக்குமோ, இது கிடைக்குமோ என்று பயந்து இன்று செய்ய வேண்டிய வற்றையும் செய்யாது விட்டுக் கஷ்டப்படுவோர் ஆயிரக் கணக்கிலுள்ளர். வருங்காலத்தில் பட்டினி கிடக்கும்படி ஏற்படுமோ எனப் பயந்து, உள்ள காலத்தும் சாப்பிடாது சாகும் வரையில் பட்டினி கிடந்து பணஞ்சேர்த்து வைக்கும் ஜனங்களை நீ காண்கிறாயல்லவா?

ஏராளமான பொருள் தேடுவார்கள். நல்ல உடை உடுக்கார்கள். நல்ல ஆகாரம் உண்ணார்கள். நல்ல புத்தகங்களும், நல்ல பத்திரிக்கைகளும் வாசியார்கள். நற்காரியங்களுக்கும் பொருள் செலவு செய்ய முன்வர மாட்டார்கள். ஏன்? நாளையதினம் என்னவாகுமோ, நாம் பட்டினி கிடக்க வேண்டி



வருமோ, என்று பலவிதயான கஷ்டங்களைப் பற்றி யோசித்து யோசித்து, அக் கஷ்டங்களை இப்பொழுதே அனுபவிப்பார்கள். இதுவே உலக இயல்பாகி விட்டது. இதைவிடப் பேதமை வேறுண்டோ?

பயம் என்பது ஒருவனது மனத்தில் ஏற்படும் எழுச்சி. சரீர பலத்திற்கும், அதற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. திடசரீர முள்ளவர்கள் சிறு காரியங்களுக்கும் பயந்து நடுங்குவதைக் காண்கிறோம். நடவாத காரியத்தைப் பற்றி யோசித்து யோசித்துப் பயந்து கிழத்தன்மையை அநேகர் இளமையிலேயே அடைகிறார்கள். வயது காரணமாயும், வியாதிகாரணமாயுந்தான் நரை, மூப் பென்பது ஒருவருக் கேற்படுகிற தென்றெண்ணாதே! பயத்தாவும், மனோ கலக்கத்தாலும் நரை, பிணிமூப்பென்ப வற்றைத் தேடிக கொள்பவர் அநேகர்.

வருங்காலத்தில் ஏதோ கஷ்டங்கள் ஏற்படும் என்று பயந்து அக் கஷ்டங்களை இப்பொழுதே யனுபவிக்கலாமா? கவலை கொள்ளலாமா? அவ்வழக்கம் உனக்கேன் ஏற்பட வேண்டும்? இரவில் சென்றால் பிசாசுகள் அடிக்கும் என்றும், காட்டிற்குட் சென்றால் காட்டு மிருகங்கள் விழுங்குமென்றும், பயந்து வெளிக் கிளம்பாது நிற்கலாமா? வெளிக் கிளம்பி பிசாசுகளால் அடிக்கப் பெற்றவர்கள் எவ்வளவு பேர்? அதனால் இறந்தவர்கள் எவ்வளவு பேர்? காட்டிற்குட் சென்றவர்களுள் காட்டு மிருகங்களால் இறந்தவர்கள் எவ்வளவு பேர்?

கடலில் பிரயாணஞ் செய்தவர்களுள், அதில் மூழ்கியவர்

களுடைய எண்ணிக்கையையும், மூழ்காது திரும்பியவர்களது எண்ணிக்கையையும் கவனி. மூழ்கியவர்களது எண்ணிக்கை மிகச் சொற்பம் என்பதை அறிவாய். வீட்டிலேயே தங்கியிருப்பவர்கட்குக் கஷ்டங்கள் ஏற்படுவதில்லையா? விஷப் பூச்சிகள் தீண்ட அவர்கள் இறப்பதில்லையா? வீட்டில் கீழே விழுந்து அவர்களது கை கால்கள் முறிவதில்லையா? இவ்விதக் கஷ்டங்கள் வெளியே போகிறவர்களுக்கு மாத்திரந்தானா ஏற்படுகின்றன. பயப்படுவதேன்!

பயமெனப் படுவதம்மா பகைவர்பால் பணியச் செய்யும்
நயமுறு வினைகள் கெட்டு நாசமாம் நடுக்க முண்டாம்
முயல் தொழில் பாழாம் முடிவினில் அழிவை யீயும்
உயர் ப தம் கெடுக்கும் தாழ்விற் குறியதாம் விடுக நாளும்
(ஆதிமூர்த்தி)

நாளைக்கு நடக்கப் போவதாக எண்ணும் கஷ்டத்தை எப்படித் தடுப்பது என்று குருட்டு யோசனை செய்து கழிக்கும் நாட்கள் எவ்வளவு என்று நீ யோசித்துப் பார்? நடவாத சம்பவத்திற்காக, உன் அருமையான வாணாளை வீணாக்குவாயானால் நீ எவ்வாறு முன்னேற முடியும்?

பயம் என்னும் பேயை நீ போக்குவதால் உன் வாணாளை நீடித்துக் கொண்டவனாவாய். பயம் கொண்டு ஒரு நாளும் நீ முன்னேற முடியாது. மனிதனாய் வாழ்வதும் முடியாது. அது உனது சந்தோஷத்தைப் போக்கும். உனது ஆயுளைக் குறைத்து, வாணாளை வீணாக்கும், மனிதனாய்ப் பிறந்தும்,



உனக்கும், பிறருக்கும் பயன்படாமலும், நீ தோன்றிய அறிகுறியுமில்லாமலும் மடியும்படிச் செய்யும்.

ஆகவே, நீ வெற்றியடைய வேண்டின், பயம் என்னும் பேயை விரட்டு. தைரியத்தைக் கைக் கொள். அப்பொழுது எல்லா நன்மைகளும் நீ தேடாமலே கிடைக்கும்.

## 3 வது-அத்தியாயம்

## ‘தன்நம்பிக்கை யில்லான் பிறர் உதவி பெறான்

வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்ப
மற்றைய வெல்லாம் பிற (குறள்)

‘‘உன் நம்பிக்கையிலேயே உனது விதியை நீ வெல்ல வேண்டும். கெடுமதி யெண்ணங் கொண்டால் உன் காரியங்கள் எப்படியாகும் என எதிர் பார்க்கத் தேவையில்லை. உன் எண்ணத்தின் பிரதிப்பலன் தானே வரும்’ எனக் கார்லைல் என்னும் விற்பன்னர் சொல்லியுள்ளார் எக்காரியத்தை நீ செய்ய எண்ணிய போதிலும் தன் நம்பிக்கை என்பது உனக்கு அவசியம்.

உலக வாழ்க்கையில் நீ தனித்து நின்று முடிக்கக் கூடிய காரியங்கள் ஒன்றுமே யில்லை எனலாம். பிறருடன் கலந்து செய்ய வேண்டியவை பெரும்பான்மை யானவை யென்று சொல்வது மிகையாகாது. ஆகவே, எக்காரியத்தில் சித்தியடைய நீ கருதிய போதிலும், உன்னுடைய திடநம்பிக்கை மாத்திரம் இருந்தாற் போதுமா? உன்னுடன் ஒத்துழைக்க வேண்டியவர்களது நம்பிக்கையும் இருக்கவேண்டியது அவசியமல்லவா? பிறர் உன் பேரில் கொண்டுள்ள நம்பிக்கையே



அவர்களை உன்னுடன் சேர்ந்து ஒத்துழைக்கச் செய்யும் என்பதை யுணர்வாய். ஆதலின் நீ வெற்றி பெற வெண்ணினால் பிறர் நம்பிக்கைக்குப் பாத்திரனாக வேண்டியது அவசியம்.

உன்னிடம் பிறருக்கு நம்பிக்கை யிருக்கவேண்டின் அதற்குத் தக்கவிதம் நீயும் நடந்துகொள்ளல் அவசியம். உன்னிடம் நம்பிக்கைக்கொள்ள அதுவே ஆதாரமாயிருக்கிறது. உனது தன்நம்பிக்கையின் பிரதிப் பலனே பிறர் உன்னிடம் கொண்டுள்ள நம்பிக்கையாகும். ‘‘மனத்திற்கு மனமே சாட்சி, மற்றதற்குத் தெய்வமே சாட்சி’’ என்பதை நீ கேட்டிலையோ? உன்னிடம் எற்படும் மனவெழுச்சியே பிறர் மனத்திலும் தொத்து வியதிபோல் ஊடுருவிப்பாயும் என்பதைத் திட்டமாய் நம்பு.

பிறரிடம் நீ பேசுங்காலத்தும், தெருவில் நீ நடக்குங் காலத்தும், எக்காரியத்தையும் ஏற்று நீ நடத்துங் காலத்தும், பூரண நம்பிக்கைக் கொண்டு அதற்குத் தக்க விதமாய் நடந்து வந்தால் பிறர் உன்னைப் பற்றிக் கவனியாதிரார். அவ்வாறில்லது தன் நம்பிக்கை யிழந்து, பிறர் தம்மைக் கண்டு பரிகசிக்கிறார்களோ என்று அங்கு மிங்கும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே ஒருவன் நடப்பானேயாகில் அவனை யார் என ஒருவரும் கவனிக்கவே மாட்டார்கள். அப்படியல்ல. அவனைக் கண்டு பிறரும் நகைக்கத் தலைப் படுவார்கள். அவன் பிறரிடம் பேச வெண்ணிய காலத்தும் பேசவும் மாட்டார்கள். இவ்வித வித்தியாசத்தை நீ தினந்தோறும் காணலாம்.

சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவிற்கு சென்ற காலத்தி

ல், ஓர் பெரிய நகரத்தின் தெருவழியே தங்கவிட மில்லாமல் சென்று கொண்டிருந்தாராம். இவருடைய கம்பீர தோற்றத்தையும், உடையையும் கண்ட ஓர் அமெரிக்கன் சுவாமியைக் கூப்பிட்டு, ஊர் முதலிய விவரங்கள் விசாரித்து "உங்களுக்குத் தெரிந்தவர் யாராவது இவ்வூரில் இருக்கிறார்களா?" என்று கேட்டாராம். அதற்கு சுவாமிகள் "ஆம், ஒருவர் உண்டு" என்றாராம்.

"அவர் யார், அவர் பெயர் என்ன"

"நீர் தான்" என்றார் சுவாமிகள்.

இப்பதிலைக் கேட்டு அவர் திடுக்கிட்டு "என்னை, எப்படி உமக்குத் தெரியும்" என்று கேட்டார்.

"தெரியாமற் போனால் நீர் என்னை யழைத்துப் பேசியிருக்க முடியாதே" என்றார் சுவாமிகள்.

அன்று முதல் அவ்வமெரிக்கன் சுவாமிகளது சீடர்களில் ஒருவரானார்.

விவேகானந்தர் தன்நம்பிக்கை யில்லாது நடந்து கொண்டிருந்தால், அமெரிக்காவில் வெற்றி பெற்றிருக்க முடியுமா வென்பதை யோசித்துப் பார்?

முன்னேற எண்ணும் ஒருவனுக்கு உதவி செய்ய வெண்ணுவது உலகத்தாரியல்பு. பணமுள்ளவனுக்குப் பணங் கொடுத்துதவுவதும் இயல்பே! மேல் ஏறும் ஒருவரைத் தன் உறவினன், இனத்தவன் என்று சொல்லிக் கொண்டவர், அவன்



தோல்வியுற்றுக் கீழிறங்கும் காலத்தில் முன்பின் தெரியாதவர் போல் புறக்கணிப்பதும் இயல்பே! அவ்விதம் கீழ்நோக்கி வருபவர்களைக் கண்டு நகைப்பவர் பலர். உதைத்துத் தள்ள எண்ணுபவரும் உண்டு!

தன்னைத்தான் மதிக்காதவன் அடிமையே! அவனது அடிமைப் புத்தியே அவனது திறனை ஒழிக்கிறது! மனித உருவங் கொண்ட மிருகம் போலாவான் அவன், பிறர் சொல்லுவதைச் செய்வதே தன் வாழ்க்கையின் நோக்கம் எனக் கொள்வான். "தான் முட்டாள், செய்திற மற்றவன், பிறன்கை ஆயுதம் தான்" என்று தன் நடத்தை யினின்றும் காட்டிக்கொள்வான்.

தன்னிடம் நம்பிக்கையில்லாத காரணத்தால் தான் செய்த காரியம் சரியோ தப்போ வென்று தன் எதிர்ப்பட்டவர்களை யெல்லாம் கேட்பான். சந்தேகப்பட்டு சந்தேகப்பட்டு, எடுத்த கருமத்தை முடிக்காமல், தலை விதியை நொந்து, கடவுள் பேரில் பழிசுமத்துவான். லட்சியம் இன்ன தென்பதே இவனுக்குத் தெரியாது. லட்சியமில்லாது திகைத்துத் திகைத்து நின்று பிறர் சொல்பவற்றை யெல்லாம் கேட்டு நடப்பதே மேல் என்ற நம்பிக்கையில் வாழ எண்ணுவான். தரித்திரத்தைக் கண்டு அஞ்சுவான். சிறு கஷ்டங்களை எண்ணி ஏங்குவான். எதிரி எதிர்ப்படுமுன் அவன் காலில் வீழ்ந்து அடிமைப் படுவான்.

தன் நம்பிக்கைக் கொண்டவன் நிலைமை வேறு. அவனுடைய நடையிலேயே வித்தியாசங் காணலாம். அவனது

உடையில் மாறுதல் தோன்றும். அவனது பேச்சிலும், பார்வையிலும் தன் நம்பிக்கைப் பரிமணித்து நிற்பதைக் காண்பாய். இக்குணத்தையே, "செப்திறம்", "புத்தி சாமார்த்தியம்", "கெட்டிதனம" என்று பலவாறாகச் சொல்லுவார்கள். புத்திசாலி, திறமுடையோன், கெட்டிக்காரன், என்று யாரைப் பொது ஜனங்கள் கருதி இருககிறார்களோ அவர்களிடம் பிறர் நம்பிக்கைஉண்டாவது சகஜந்தானே!

தன் நம்பிக்கைக் கொண்டவன் கம்பீர பார்வையுடன் எக்காரியத்தையும் ஏற்பான். தரித்திரத்தைக் கண்டஞ்சான். எதிரிகளின் ஏளனத்திற்குப் பயப்படமாட்டான். எதிரி ஒருவன் இருப்பதாகவும் கருதமாட்டான். "எனக்கு எதிரியில்லை. நான் செய்யுங் காரியங்கள் சரியானவை" என்ற திடங்கொண்டு, அங்குமிங்கும் பாராமல் தன் லட்சியத்திலேயே நேர்முகம் செலுத்தி வேலை செய்வான். முன்னேறுவான். இவன் செல்லும் வேகத்தைக் கண்டு அருகிலுள்ளோர் கண்டஞ்சுவார்கள். இவனிடையே வீழ்ந்து இவனுடைய முற்போக்கைத் தடுக்காமல் முன்னேற வழிவிட்டு, இடம் கொடுத்து விலகி நிற்பார்கள். இத் தன்நம்பிக்கையுடன் முன்னேறுபவனை "இவன் அகம்பாவம் படைத்தவன்" என்று சொல்லிய போதிலும், அவனது முன்னேற்றத்தைத் தடுக்க எண்ணமாட்டார்கள்.

அதிகப் படிப்பில்லாத சில உபாத்தியாயர்கள் தங்கள் மாணவர்கட்கு அதிகத் திறமையாய்ப் பாடம் சொல்லிக் கொடுப்



பதையும், அதிகப் படிப்புள்ள உபாத்தியாயர்கள், தன் நம்பிக்கை யில்லாத காரணத்தால் வாய்திறவாமல் சங்கடப்படுவதையும் காண்கிறோம்.

பிராஞ்சிய யுத்தவீரன் ஒருவன் தன் குதிரையின் மேல் வேகமாய் ஏறிவந்து நெப்போலியனிடம் ஓர் கடிதம் கொண்டு கொடுத்தான். அவ்வீரன் ஏறிவந்த குதிரை, வந்த வேகம் காரணமாய் இறந்தது. எழுதிவந்த கடிதத்திற்குப் பதில் எழுதிக் கொடுத்துத் தன் குதிரையின் மேல் ஏறி உடனே போகும்படிச் சொன்னார் நெப்போலியன்.

"நீங்கள் ஏறும் குதிரையில் நான் ஏறிச் செல்வது தகுதியோ" வென்றான் யுத்தவீரன்.

"நீ ஏறிச்செல். தகுதி இது, தகுதியிதுவல்லவென்பது பிராஞ்சிய வீரனுக்கில்லை" என்றார் நெப்போலியன்.

மேற் சொல்லிய குணம் படைத்த யுத்தவீரர்கள் எவ்வளவு பேருண்டு! தன்னுடைய யோக்கியதையைத் தானே குறைத்துக் கொண்டால் முன்னேறுவதெப்படி? "நான் சிறுவன் என்றெண்ணிக் கொண்டேயிருந்தால் நீ பெரியவனாவதெப்போ! எதை உனது பாவனையாக வைத்துக் கொண்டிருக்கிறாயோ அதுவே உனது லட்சியமாகும் என்றனர். நல்ல உடை நல்ல உணவு தனக்கில்லை யென்று எண்ணி யெண்ணிக் காலங் கழிப்பவர்கள் அநேகர். அரசன் வேடம் பூண்ட ஒருவன் தான் அரசன் என்ற எண்ணம் அவனிடம் ஏற்பட்டாலன்றி அவ்வேடத்தைச் சரிவர நடித்திக் காட்டமுடியுமா? முடியாது.

அதுபோல் ஒவ்வோர் அடியாய் முன்னேற முன்னேற உன்னைத் தூண்டி ஊக்கம் கொடுத்து உனது அபிவிருத்திக்கு உனது தன் நம்பிக்கையே பேருதவியாயிருக்கிறது. "நான் சிறியேன் என் நம்பிக்கை எனக்கு எவ்விதம் உதவும் என்று எண்ணாதே!" உன் கை விளக்குச் சிறிதெனினும், அது உன்னிடமுள்ள வரையில் எந்த இருளிலும் நீ சென்று திரும்பலாம். ஆகவே,

நீ ஏற்றுக் கொண்ட காரியத்தைச் சாதிக்க, நீ முன்னேற, வெற்றிபெற தன்நம்பிக்கையே முக்கிய கருவியாயிருக்கும். அக்கருவியில் எவ்விதப் பழுதும் ஏற்படாமல் கவனித்துக் கொள். மனோவலியே சரீர வலியை விட மேலானது. நெருக்கடியான சமயம் வருங்காலத்தில் தன் சரீர பலத்திற்கு மேற்பட்ட காரியங்களை அநேகர் செய்து முடித்திருப்பதைக் காண்கிறோமல்லவா?

"நான் எவ்வித காரியங்களையும் செய்து முடிக்கக் கூடும். அதற்குப் போதிய தத்துவம் என்னுள்ளிருக்கிறது. கடவுள் என்னுள் இருக்கிறார். அவருடைய கருணையை நான் பெற்றிருக்கிறேன்" எனப் பூரண நம்பிக்கை வைத்து எக்காரியத்தைச் செய்ய முற்பட்ட போதிலும், அது உனக்குப் பன்மடங்கு பலத்தைக் கொடுக்கும். "நான் பாவி, என்னால் யாதொரு காரியமும் கைக்கூடாது" என ஒருவனுடைய எண்ணம் கீழ் நோக்குமானால் ஒரு காரியத்தையும் அவன் செவ்வனே செய்துகொள்ள முடியாது என்பது திண்ணம்.



கடவுளால் சிருஷ்டிக்கப் பெற்றவருள் எவன் உயர்ந்தவன்? எவன் தாழ்ந்தவன்? கருணைக் கடலான கர்த்தர் வித்தியாசம் வைத்துப் படைத்தார் என்றெண்ணாதே! இவன் உயர்ந்தவன், அவன் தாழ்ந்தவன், என்ற வித்தியாசத்தை நம்முள் நாமே ஏற்படுத்திக் கொண்டு, அவ் வித்தியாசக் கடலில் அல்லற்பட்டு மாய்கிறோம்.

சர்வகலாசாலைப் பட்டங்கள் பல பெற்றுள்ள வாலிபர்கள் மாதம் ரூ20 சம்பளத்திற்கும் கஷ்டப்படுவதைக் காண்கிறோம். அவர்கள் பள்ளிக் கூடங்களுக்குப் போனதில் குறைவா? பட்டங்கள் பெற்றதில் குறைவா? இவற்று ளெல்லாம் ஓர் பெருங் குறை யிருப்பதாய் எண்ணாதே! அவனிடம் தன் நம்பிக்கை யென்பதே குறை என்பதைக் காண்பாய்.

மனிதன் தன்னுடைய சக்தி இவ்வளவென்பதை அறியவில்லை போலும்! அவன் மலைகளைத் துளைக்க வில்லையா? கடலைக் கடக்க வில்லையா? ஆகாயத்தில் பறக்க வில்லையா? காட்டு மிருகங்களைப் பிடித்துப் பழக்கி ஆட்டி வைக்க வில்லையா? நூதன இயந்திரங்களைக் கண்டு பிடித்து உலகத்தாருக்கு நன்மை செய்ய வில்லையா? இப் பெருங் காரியங்கள் எவ்விதம் செய்து முடித்தார்கள் என எண்ணுகிறாய். இவற்றைச் செய்தவர்கள் தன்நம்பிக்கையை இழந்திருந்தால் அவற்றை அவர்கள் செய்து முடித்திருக்க முடியுமா?

ஒருகாரியத்தைச் செய்ய முற்படுகையிலேயே "இது என்னால் முடியக் கூடியதல்ல. என்னைவிடப் பிறர் நன்றாய்ச்

"செய்யக்கூடும்" எனத் தன் நம்பிக்கையில்லாது ஆரம்பித்தால் அக்காரியம் எவ்விதம் விருத்தியடையும்? ஆற்றின் தலைப்பை விட உயர் நிலத்தில் அது பாய முடியாது என்பதை உணரா யோ? அதுபோல் உன் எண்ணத்துக்கு மேலாக எக்காரியத் தையும் நீ செய்து சாதிக்க முடியாது என்பது வெளிப்படை.

உன் மனத்தில் ஏற்படும் தோற்றமே, நீ செய்யப்புகும் காரியத்திற்கு ஆதாரம். உன் மனத்தில் அது முதலில் உரு வெடுக்கிறது. மனவெழுச்சியில்லாமல் அவ்வெண்ணம் உனக் கேற்படாது. அதுவே உனது அவயவங்களுக்குப் போதிய பலத்தைக் கொடுக்கிற தென்பதை உணர்வாய்.

உன் நம்பிக்கையைக் கெடுக்க முயலும் எவனும் உன்னு டைய விரோதி யெனக்கொள்வாயாக. அவனை உன்னருகில் விடாதே! தன்னம்பிக்கையைக் கெடுப்பவனாவான். தன் நம்பிக்கையே உன்னை ஆளாக்கும். பிறர் உன்னைக் கைவிட்ட போதிலும், உனது நம்பிக்கையை விடாதே! உன்னை நீயே விட்டால் உய்யும் வழியுண்டோ வெனக் கவனி! ஆகவே எக் காரணம் பற்றியும் தன் நம்பிக்கையை இழக்காதே! நீ இழப்பா யேயானால் நடைப் பிணம் போலாவாய்.

தோற்றதாக மனங்கொளிற் றோல்வியே
துணிவிலே னெனல் தோல்வியின் றோற்றமே
ஏற்றவெற்றி வந்தெய் தினு மெய்தொணா
தென்று கூறுதி ஈதிழி வெண்ணமே
சாற்றல் நானிழப்பே னெனல் தாழ்த்துமே



சாதமே விவ்வுலகினிற் பார்ப்பன
ஆற்றல் வெற்றி மனத்திட மாகுமால்
அமையு மீதறி வின்னிலை யென்பவே

(வெற்றியும்-மன நிலையும் —ஆதிமூர்த்தி)

## 4 வது-அத்தியாயம்

### 'கவலைப்பட வெட்கப்படு'

கவலைப் படாதவர் உலகத்தில் மிகச் சொற்பம். கவலையின் காரணமாய் வியாதியிலகப்பட்டவர் பல கோடி! இளமையிலேயே கிழத்தன்மை யடைந்தவர் மற்றும் பல கோடி. உயிர் துறந்தவர்களும் பல்லாயிர முண்டு!

"உன் முகத்தில் மாறுதல் என்ன" என்று நீ யாரையாவது கேட்டால், "சில நாட்களாக எனக்குக் கவலை யதிகம்" என்று சொல்வதைக் கேட்பாய். மனிதனுக்கு இவ்வளவு கஷ்டங்களைக் கொடுக்கும் "கவலை" என்பது என்ன? அது விஷயமாய் நீ யோசித்ததுண்டா? "கவலை, கவலை" என்று பலர் அலறுவதைக்கண்டும் அது விஷயமாய் நீ யோசிக்கவில்லையா? எல்லோரும் சொல்வது போல் நீயும் அவ்வார்த்தைகளை உபயோகித்து உபயோகித்துக் காலம் தள்ளுகிறாய் போலிருக்கிறது.

'கவலை' என்பது யாது? திடமற்ற மனநிலை. 'பயம்' என்பதன் மாற்றுப் பெயர். அது நியாயமானதா யிருக்கலாம் காரண முள்ளதா யிருக்கலாம்; அல்லது காரண மற்றதாயும் நியாமற்றதாயு மிருக்கலாம். நடந்து செல்லும் வழியில் எதிர்ப்பட்ட ஓர் அபாயத்தைக் கண்டு திடுக்கிட்டுப் பயந்து துள்ளிக் குதித்து வழி விட்டு ஓடலாம். அது நியாயமான எண்ணம். அதை யொட்டிய காரியமும் அதுவே! அதனைக் குற்றமாக



அல்ல, புத்திசாலித் தனமாகவே கருது வார்கள்.

அவ்வாறின்றி, வீட்டை விட்டுக் கிளம்பு முன்னரேயே போகும் வழியில் எதிரியைக் காண்பது போலவும் மோட்டார் வண்டி தன் மேல் ஏறிக்கை கால்கள் முறிவது போலவும்' பகல் கனவு கண்டு அங்கு மிங்கும் சுற்றிப் பார்த்த வண்ணமாய், பயம் என்னும் பேய்ப் பிடித்தப் பலர் நடத்தையும் காண்கிறாய். இது அகாரணமாய் ஏற்படும் பயம். இதனையே 'கவலை' எனச் சொல்லுவதும் பொருந்தும்.

கவலை யென்பது கோழைத் தன்மையே! "நீ கோழை" என்று ஒருவனைச் சொன்னால் அவனுக்குக் கோபம் வருவது சகஜம். ஒருவனை "நீ தைரியம் இல்லாதவன்." என்றால் அவன் உன்னை அடிக்க வருவான். அவ்வாறு சொல்லாமல் நீ ஏன் கவலையோடிருக்கிறாய்" என்று சோன்னால் நீ அவனிடம் அனுதாபம் காட்டுவது போல் எண்ணி நட்புக் கொள்வான். 'பயம்" என்னும் வார்த்தை "வெட்கம்" என்னும் வார்த்தையைத் தொடர்ந்து வரும். ஆனால் 'கவலை' என்றதற்கோ அவ்வாறில்லை. இது உலக இயல்பு. அது சரியல்ல.

நடக்காத காரியத்தைப் பற்றிச் சிந்தித்த வண்ண மிருப்பது "கவலை" யெனப்படும். எண்ணுங் கஷ்டங்கள் எல்லாம் நமக்கு ஏற்படுவதே யில்லை.

கவலை யென்பது உன் மனோ வலியைக் கெடுக்கிறது' அதனைச் சக்தி யற்ற தாக்குகிறது. சுறு சுறுப்பைக் கெடுத்து மந்த மாக்குகிறது. உன் நோக்கத்தை மாற்றுகிறது. உன்

பார்வையைத் திரித்துக் காட்டுகிறது. உலகம் மாறு பட்டதாக உனக்குத் தோற்றுகிறது. சந்தேகம் அதிகப் படுகிறது. நிழலைக் கண்டும் சந்தேகமும் பயமும் கொள்கிறாய். உன்னைச் சுற்றிலும் ஆபத்து நிறைந்திருப்பதாகவே நீ கனவு காண்கிறாய்.

“கையில் காசு பணமில்லாமல் ஒருவன் சாப்பாட்டிற்குங் கஷ்டப் படுங் காலத்தில் கவலைப் படாதிருக்க முடியுமா” வெனக் கேட்கலாம். அக் சேள்வியை அநேகர் கேட்கிறார்கள். ஆனால் அவர்கள் உண்மையை ஆராய்வ தில்லை. உலக வாழ்க்கையே நிரந்தர மானதல்ல. பிறந்தவன் இறப்பது நிச்சயம். எச்சமயம் என்பது ஒருவரும் அறியார். அது போல் எல்லாப் பொருள்களும். செல்வம் என்பதும் அது போலவே. ஒருவரிடமும் நிரந்தரமாய் அது நிற்பதில்லை. “நிச்சயம், நிரந்தரம்” என்பது ஓர் பகற் கனவு. ஆபத்து ஒருவருக்கு எச்சமயமும் உண்டு. என்? எல்லா சிருட்டிகளும் அழியக்கூடியவையே!

இன்று லட்சாதிகாரி. விடிந்தால் அவன் பிட்சாதிகாரி. இன்று முடிமன்னன், விடிந்தால் பிடி மண்ணன். இந்நிலையை நீ தினந்தோறும் காண்கிறாய். இப்பொழுது திடசரீரி, மறு நிமிஷம் அவன் பிரேதம். காரணம் எவ்விதமாயுமிருக்கலாம். ஆகாய விமானத்தில் ஏறி விழவேண்டாம். இருந்விடத்தில், நின்ற நிலையில், உயிர் விடுவதையும் காண்கிறோம். உலக வாழ்க்கை அவ்விதமிருக்க, எதற்காக ஒருவன் கவலைப் படுவது?

ஒவ்வொருவனுக்கும் ஒவ்வோர் விதமான காரணங்கள்



ஏற்படும். வயது காலத்தில் பட்டினி கிடக்கவேண்டுமே யெனக் கவலை யடைவான் ஒருவன். தன்னைக் கீழே தள்ளித் தன்னுத்தியோகத்திற்கு மற்றவன் வருவானோ என்ற பயம் சிலருக்கு. ஊன்றிக் கவனிக்கையில் இத்தகைய பயம் ஒருவருக்கும் ஏற்படத் தேவையில்லை. பலவிதத் தோற்ற முடையதாக உலகத்தைக் காண்கிறோம். பணம் வைத்துக் கொண்டு இப்பொழுது சுக போகங்களை யனுபவிப்பார். சாங்காலத்திலும் அந்நிலையிலேயே இருப்பவர்கள் எவ்வளவுபேர்? தற்சமயம் தரித்திரத்தில் உழலுபவன் சாகும் சமயம் பட்டினியால் இறப்பவர் எவ்வளவு பேர்? வருங்கால வாழ்க்கையைத் தற்கால நிலைமையைக் கொண்டு அளப்பது வழக்கமாகி விட்டது.

தினந்தோறும் உனக்கேற்படும் கவலைகளையெல்லாம் அவ்வப்போது எழுதிக்கொண்டேவா. ஆறு மாதங்கள் கழித்து அக்குறிப்பை வாசித்துப்பார். உலகத்தில் ஏற்பட்டிராத காரியங்களைப்பற்றி யெல்லாம் எண்ணிப் பயந்திருந்ததைக் காண்பாய். கஷ்டக்கடலிலேயே நீ மூழ்கி வந்திருப்பதாகவே கருதுவாய். ஆனால் உண்மையில் அவ்விதம் யாதொன்றும் நடைபெறுதிருந்ததையும் உணர்ந்திருப்பாய். ஏற்படாத சம்பவங்களுக்காக நீ எவ்வளவு நேரம் யோசனையில் காலங் கழித்திருந்திருப்பாய்! உனது வேலைகள் அதன் காரணமாய் எவ்வளவு குறைந்திருக்கும் என்பதை யோசி. எவ்வளவு நஷ்டம் அதன் காரணமாய் ஏற்பட்டிருந்த தென்பதையும் ஆராய்ந்து பார். ஊன்றிக் கவனிக்கையில் எல்லாக் கஷ்டங்களையும் நீயே உன்

எண்ணங்களாலேயே தேடிக்கொண்டிருந்ததை உணர்வாய்.

அது சரி. கவலை என்பதை எவ்விதம் போக்குவது? அது வராமல் தடுக்கமுடியுமா? கவலையென்பதே யில்லாதவர்கள் உலகத்தில் உண்டா? கவலையைப் போக்குவது சிரமந்தான். அது ஏற்படாமல் தடுக்க பழக்கம் வேண்டும். கவலையில்லாதவர்களும் உலகத்தில் உண்டு. கவலை என்பது ஒருவனது மனோநிலை. அதனைப் போக்க வெண்ணுபவன், அது எப்படி, எச்சமயம் தன்மனத்தில் எழுந்தது என்பதைக் கண்டு பிடிக்கவேண்டும். கவலை ஒவ்வொன்றும் உன் வாழ்க்கைச் சம்பவங்களி னின்றும் ஏற்படுபவை. சம்பவங்களைப்பற்றி யோசித்து, யோசித்து மனதைக் கலக்கிக்கொண்டே வருவாயானல் 'பயம்' என்னும் பேய் உன்னிடையே குடியேறும் அதற்கு நீ ஒரு சிறிதும் இடம் கொடுக்கலாகாது. பயந்த மனிதனை யுத்த களத்திற் கொண்டு நிறுத்திய சமயம், அவனது பயம் அவனைவிட்டு நீங்கி யுத்தம் செய்வதைக் காண்பாய் ஏன்? எப்படி? "யுத்த களத்திற்கு வந்து விட்டோம். யுத்தம் செய்யாமல் முடியாது. திரும்பி யோடினாலும் ஆபத்துண்டு" என்ற எண்ணமே அவனது பயத்தைப் போக்கியது. அது போல் 'உலக வாழ்க்கைக்கு வந்து விட்டோம். நாமாய்ப் பின் வாங்க முடியாது. கொண்ட கடமையை முடித்தே தீர வேண்டும். அதுவே எனது வாழ்க்கை லட்சியம்' என்றெண்ணி விட்டால் அனிடம் கவலை யென்பது எவ்விதம் ஏற்படும் எனக் கருதுகிறாய்? ஒருநாளும் இல்லை.



ஒரு சம்பவத்தைக் குறித்துப் பயப்படுவதோ கவலைப் படுவதோ, அது அவனுடைய குழந்தைக் குணத்தைக் காட்டுகிறது. குழந்தைப் பருவத்தில் ஒருவன் தனக்கு வேண்டிய ஒவ்வொரு காரியத்திற்கும் தன் தாயின் உதவியைத் தேடுகிறான். தனக்கு வேண்டிய ஆகாரம் கொடுக்கவும், தான் வெளியில் போய் நடமாடவும், உடுக்கவும், உறங்கவும் தன் தாயின் உதவியையே குழந்தை தேடுகிறது. தாயின் மடியே அதன் உலகம். தாயைவிட வேறு ஒருவரும் அக் குழந்தைக்குப் பெரியவராகத் தென்படுவதில்லை.

வயது வர வர கல்வியின் பயனாகவும், பொது ஜனங்களிடம் பழகும் வழக்கத்தாலும், இக் குழந்தைக் குணம் மாறவேண்டி யிருக்கிறது. தாயினிடம் வளர்ந்த எண்ணம் மாறினால் ஒருவனுடைய குழந்தைக் குணம் மாறும். கவலையிலும் பயத்திலும் மூழ்கிக் கொண்டிருந்தவர்களின் இளமைச் சரித்திரத்தைக் கவனித்துப் பார். தாய்மார்களிடமோ அல்லது அவர்களைப் போன்றவர்களிடமோ அவர்களது உதவியையே பெரிதும் நாடி, அவர்கள் வந்த விஷயம் நன்கு விளங்கும். தாய்க் கைப்பிள்ளையாய் உலகம் தெரியாமல் வளர்ந்தவர்கள், வெளிக் கிளம்பியவுடன், தனக்கிருந்த உதவி போய் விட்டது போலவும், தான் தனித்திருப்பதாகவும், தனக்கு பிறர் எதிரிகள் போலவும் எண்ணிக் கலங்குகிறான். இப்பழக்கம் அடியோடு நிற்கவேண்டும்.

நான், ஓர் மனிதன். பிறரைப்போல் சிருஷ்டிக்கப் பெற்

றவன். உலகம் என்னும்யுத்தகளத்தில் நான் ஓர் யுத்த வீரன் வாழ்க்கை யென்னும் சண்டையில் வெற்றிப் பெறவேண்டுவதே என் கடமை யென்றும், தோல்வியடைந்தால், நான் இருந்த விடக் தெரியாமல் மூழ்கி மடியவேண்டும் என்பதையும்' நீ உணரல் வேண்டும்.

உன் உயிரை, உன் வாழ்க்கையைப் பாழாக்க வல்ல இப் பேய் இருப்பதாகவே எண்ணாதே! அதை மறந்து விடு.

'கவலையும்' 'பயமும்' ஓர் தாய் வயிற்றுப் பிள்ளைகள். அவற்றை என் மனத்திருக்க விடமாட்டேன் என்ற திடங் கொள். இதுவே இப்பேயை விலக்க முதற்படி.

## 5வது அத்தியாயம்-

## 'திடமுண்டேல் - இடமுண்டு'

ஆக்க மதர்வினாய் செல்லு மசைவிலா
ஊக்க முடையா னுழை (வள்ளுவர்)

"எனக்கோ இன்று வயது நாற்பது. ஐம்பதாம் வயதில் 15 லட்சம் ரூபாய்க்கு அதிபனாக இருப்பேன். அறுபது வயதாகும்போது முப்பது லட்சம் தேடிவைப்பேன்" என்று வியாபாரத்தில் நஷ்டப் பட்டதன் காரணமாய்க் கடன் கொடுக்க முடியாது அடைப் பட்டிருந்த "ரவுஸ்" என்னும் ஓர் வியாபாரி தானிருந்த ஜயிலின் சுவற்றில் எழுதி வைத்திருந்தான். அவன் இறக்கும் தருவாயில் 90 லட்சம் ரூபாய் தேடி வைத்திருந்தானாம்!

கடன் கொடுக்க முடியாமல் ஜயிலில் இருக்கையில் அவன் செய்து கொண்ட தீர்மானத்தைக் கவனித்தாயா? ரவுஸ் இருந்த நிலைமையை விடத் தாழ்ந்த நிலையிலா நீ இருக்கிறாய். கையில் பணமும் இல்லை. வியாபாரத்தில் நாணயமும் போய் விட்டது, சலன மற்ற மலை போலிருந்த அவன் மனோ திடத்தைக் கவனித்தாயா?

நஷ்டப்பட்டுக் கஷ்டப்பட்டும் அநேக வியாபாரிகளைக் கவனி. தொழிற்றிறம் போதாமல் அவர்கள் நஷ்டப் பட்டார்கள்

எனச் சொல்ல முடியாது. தொழில் திறமுடையோரும், மதிலும் பல விதத்தும் யோக்கியதை பெற்றவரும் வியாபாரத்திலும், மற்றய முயற்சிகளிலும், தோல்வி யுறுவதற்கும் காரணம் திடபுத்தி யில்லாதிருத்தலே என்பதை ஊன்றிக் கவனிக்க உணர்வாய்.

உலக வியாபாரத்தில் மனோ திடமில்லாதவன் எதையும் சாதிக்க முடியாது. பெரும் பெருங் காரியங்களைச் சாதித்தவர்கள், மனோ திடங் கொண்டவர்கள் என்பதை யுணர்வாய்.

கிரீஸ் தேசத்தில் சமீப காலத்தில் நடைபெற்ற ஒலிம்பியன் விளையாட்டுகளில் ஓர் சம்பவம் நடந்தது. அந்த விளையாட்டுகளில், ஓடும் பந்தயத்தில் வெற்றி பெற்ற செதிரியோ லோயிஸ், என்பவன் சரித்திரமே அது. அவன் ஓர் ஏழைக் குடியானவன் வயிற்றிலுதித்தவன். நன்றாய் ஓடக்கூடியவன் என்ற பெயர் மாத்திரம் அக்கம் பக்கங்களில் அவனுக்கிருந்தது. அதற்காக அவன் பெரும் ஆடம்பரங்கள் செய்யவில்லை.

தனது நிலங்களை உழுது பயிர் செய்த நேரங்கள் தவிர பிற நேரங்களில் அவன் ஓடிப் பழகி வந்தான். பந்தயத்திற்கு ஆட்களைப் பதிவு செய்த காலத்தில் நமது சோதிரியும் அதில் சேர்த்துக் கொள்ளப் பெற்றான். பந்தயத் தினத்தன்று வெளிக் கிளம்பும் சமயம், தனது வயது முதிர்ந்த தகப்பனிடம் விடை பெற்று நின்றான். தன் மகனைத் தடவிக் கொடுத்து "சோதிரி நீ திரும்புவதானால் வெற்றியுடன் தான் திரும்ப வேண்டும்" என்றான் அவனது தகப்பன்.



இவ் வார்த்தைகள் நமது சோதிரிக்குப் புதிய உணர்ச்சியைக் கொடுத்தன. வெற்றி பெறாது திரும்புதல் கூடாது என்ற திடங் கொண்டான். அந் நிர்ணயத்தின் அறிகுறி அவன் முகத்தில் பிரகாசித்தது. இதனைக் கண்ணுற்ற தகப்பனுக்குத் தன் மகன் வெற்றியுடனே திரும்புவான் என்ற திடமும் ஏற்பட்டது.

பந்தய தினத்தன்று லட்சக் கணக்கான ஜனங்கள் விளையாட்டுக்களைக் காணச் சென்றனர். சோதிரியின் தகப்பனும் தன் மகளைத் துணைக் கொண்டு சென்றிருந்தான். பந்தயம் நடப்பதை வெகு கவனமாக நமது சோதிரியின் தகப்பனும் தனது மங்கிய கண்களால் கவனித்து வந்தான்.

சோதிரி வெற்றி பெற்றான் என்ற செய்தி வெளிக்கிளம்பியது. கிரீஸ் தேசத்திற்குப் புகழைத் தேடிக்கொடுத்த வாலிபனுக்கு எவ்வித மரியாதை செய்வது என்று திகைத்து நின்றவர் அநேகர். புஷ்பமாரி பெய்தவர் பலர். கடிகாரங்கள் பரிசு கொடுத்தவர் அனந்தம். அமெரிக்க மாது ஒருத்தி கல்லிழைத்த வாசனைப் புட்டி யொன்றைக் கொடுத்தனள்.

கிரீஸ் தேசத்தரசர் ராணுவ முறைப்படி மரியாதை செய்தார். இவற்றை யெல்லாம் ஒரு பொருட்டாகவே யெண்ணவில்லை நமது சோதிரி. கூட்டத்தை அங்கு மிங்கும் விலக்கிக் கொண்டு யாரையோ தேடுவது போல் கூட்டத்தி னிடையே நுழைந்து வந்தான் சோதிரியும்.

உடல் நடுங்கி, மனம் பூரித்துக் கண்ணீர் விட்ட வண்ணம் இரு கைகளையும் விரித்து வரவேற்கும் வண்ணம் நின்ற ஓர் கிழவனிடம் ஓடி வந்து அவன் தழுவிக் கொண்டதை ஜனங்கள் கண்டார்கள். தகப்பனைக் கண்டதும் "அப்பா உமது கட்டளைப் படியே நிறைவேற்றினேன்" என்றான்.

ஓடிப் பழகிய பழக்கத்தைவிட, ஜயிக்க வேண்டும் என்று கொண்ட மனோ திடமே அவனுக்கு வெற்றியைக் கொடுத்தது என்பது மிகையாகாது. ஓர் கருமத்தைச் செய்து முடிக்க எண்ணுபவன் அதற்காகப் பழக வேண்டுவது அவசியம். நீந்த வேண்டும் என்றெண்ணுபவன் நீந்திப் பழக வேண்டும். அதுபோல் மனோ திடம் வேண்டுபவன் பயிற்சி செய்து திடமுண்டாக்கிக் கொள்ள வேண்டியது அவசியம். ஒரே நாளில் ஒருவனுக்கு மனோதிடம் ஏற்பட்டு விடும் என்றெண்ண வேண்டாம். கொண்ட கருமத்தை எப்படியும் முடிப்பேன் எனக் கொண்ட நோக்கத்தைச் சிதற விடாமல், தினந்தினம், வாரா வாரம், மாதா மாதம் சிந்தித்த வண்ணமா யிருந்து காரிய சித்தி பெறவேண்டும். அவ்வாறு செய்துவர அவனவன் மனோ நிலைக்குத் தக்கவாறு, குறைந்த காலவளவிலோ, அல்லது அதிகக் காலவளவிலோ, திடங்கொண்டு காரியங்களைச் சாதிக்கும் திறம் ஏற்படும்.

நீ பெறும் கல்வியின் நோக்கந்தான் என்ன? செய்ய வெண்ணும் காரியத்தைச் சரி, அல்ல, எனப் பகுத்தறிந்து சரியெனக் கண்டவற்றைக் காலந் தவறாமல் தன் நலங் கருதி வேண்டினும், வேண்டாவிடினும், செய்து முடிக்குந்திறம் பெ



றுவதே யாகும். நீ பெறவேண்டிய முதற் பாடம் இதுவே. திறம் பெறக் கற்று வெளியேற வேண்டிய பாடமும் இதுவே என உணர்வாய்.

மனம் என்பது ஓர் அளக்க முடியாத ஏரியாகும். அவ் வேரியில் தேக்க வைக்கப் பெற்றிருக்கும் 'திடம்' என்னும் நீரின் அளவைக் கொண்டே 'செய்திறம்' என்னும் சக்தி பிறக்கிறது. நீ செய்ய வேண்டிய எல்லாக் கருமத்திற்கும், மனோ திடம் என்னும் நீரை உன் வாழ்க்கையில் தேக்கி வைக்க வேண்டியது அவசியம். மனம் என்னும் ஏரியில் யாதொரு பழுதும் ஏற்படாமல் காக்க வேண்டியது உனது கடமை.

ஏரியில் பழுது படுமானால் அதன் நீர் பலவிடங்களிலும் கசிந்து ஓடி அதன் பலன் குறைவது போல் மனம் என்னும் ஏரியில் சஞ்சலம் என்னும் பழுது ஏற்படுமானால் திடம் என்னும் நீர் தங்காமல் செய்திறம் என்னும் சக்தி குறையும் என்பதை யுணர்வாய்.

திடம் என்னும் நீரைப் பஞ்சேந்திரியங்கள் என்னும் குழாய்கள் வழியாய்க் கொண்டுவந்து கருமம் என்னும் இயந்திரங்களில் பூட்ட, வாழ்க்கை லட்சியம் என்னும் காரியம் சித்தியாகும். மனம் என்னும் ஏரியில் பல வடி மடைகள் ஏற்பட்டு நீர் சிதறுமானால் செய்திறமென்னும் சக்தி பிறக்குமா? பஞ்சேந்திரியங்கள் என்னும் குழாய்கள் திறமுடையன வாயிருந்தும் பலனில்லை. ஏரியில் எவ்வளவுக் கெவ்வளவு நீர் அதிகம்

தங்கியிருக்கிறதோ! அதற்குத் தக்க வளவில் தான் சக்தியும் பிறக்கும். மண்ணும், கல்லும், முள்ளும் நிறைந்துள்ள ஏரியில் எவ்விதம் தண்ணீர் தங்க ஏது வில்லையோ அதுபோல், தீய நினைவுகள், சஞ்சலங்கள், போன்ற மண்ணும், கல்லும் உன் மனம் என்னும் ஏரியில் தங்குமானால் திடம் என்னும் நீர் தங்க இடமிருக்காது. ஆகவே, உன் மனத்தைச் சுத்தமாக எப்பொழுதும் வைத்துக்கொள். இப் பழக்கம் எப்பொழுதும் உனக்கிருக்க வேண்டும்.

“மற்றவர்களைக் காட்டிலும் எவ்விதம் நீர் அதிக வேலை செய்து முடிக்கிறீர்” என ‘பீச்சர்’ என்னும் கோடீஸ்வரனை ஒருவர் கேட்டகாலத்தில் ‘மற்றவர்களை விடக் குறைவாக நான் வேலை செய்வதால்’ என்றார்.

“பிறர் மூன்று தடவை செய்யுங் காரியத்தை நான் ஒரே தடவையில் செய்து முடிக்கும் பழக்கம் பெற்றேன். ஒரு காரியத்தைத் துவக்கு முன் அதனைச் செய்யலாமா செய்யலாகாதா என்ற சந்தேக எண்ணங் கொண்டே பிறர் ஆரம்பிப்பார்கள். சிலசமயம் சிறிது ஊக்கம் கொண்டு வேலை செய்வார்கள். மறுசமயம் காரியத்தை விட்டு நிற்பார்கள். மறுபடியும் துவக்க, சிறிது இடையூறுகள் ஏற்பட்டதும், காரியத்தை அடியோடு நழுவ விட்டுப் பழங்கணக்கை நினைத்து நினைத்து குருட்டு யோசனை செய்துவருவார்கள். ஆனால் நான் அவ்வாறு செய்வதில்லை. ஒருகாரியத்தைச் செய்ய வெண்ணுகையில்



ஒரே மனமாய் ஊக்கம் கொண்டு இறங்கி நின்று ஒரே தடவையில் அதைச் செய்தேமுடிப்பேன்” என்றார். வாழ்க்கையில் வெற்றிபெறும் ரகசியம் இதுவே.

மனத்தைச் சிதறவிடும் பழக்கம் உன்னைக் கெடுக்கும். பலவிதக் கவலைகள், பொறாமைகள், தூர் எண்ணங்கள், என்னும் மண், கல், முள் என்னும் குப்பைகளைக் கொண்டு நிறப்பாதே! மனதைக் கலக்க மில்லாமல் வைத்துக் கொள்ளும் பழக்கம் உனக்கு இளமை முதற்கொண்டே ஏற்படட்டும். மனதைச் சிதறவிட்டுப் பெருங் காரியங்களைச் செய்யலாம் என்று எண்ணாதே! அது முடியாத காரியம்.

ஓர் பெரும் வியாபார நிலையத்தின் தலைமை யதிகாரியாய் இருந்த ஓர் வாலிபரை வேறு ஓர் நிலயத்தையும் சேர்த்து நிர்வகிக்கும் படியாகவும், அதற்கு இறட்டிப்புச் சம்பளம் கொடுப்பதாகவும் கேட்ட காலத்தில் “என் மனதைப் பலவழிகளிலும் செல்லும்படி விட்டால் நான் முதலில் கொண்ட கருமம் வெற்றியுடன் முடியாது” என்று சொல்லி விட்டார்.

சயிறு இழுக்கும் பந்தய விளையாட்டைக் கவனித்திருப்பாய். ஒரே நிதானமாய் மூச்சுப் பிடித்து இழுக்கும் பக்கமே வேற்றி பெறுவதைக் காண்பாய்.

நீ மகா புத்திமானாயிருந்தும் பலன் இல்லை. தன் மனோதிடத்தால் சாதாரண புத்தியுடையோரும் பெரும் பெருங் காரியங்களைச் சாதித்து முடிப்பதையும், புத்திமான்கள் அத்திட

த்தியில்லாத காரணத்தால் எடுத்த காரியங்களைச் செய்து முடிக்காமல் தயங்கி நிற்பதையும் காண்கிறோமல்லவா?

கொண்ட கருமத்தைச் செய்து முடிக்கும் வரையில் மனோதிடம் அநேகருக்கு ஏற்படுகிறதில்லை. வெகு உற்சாகத்துடன் ஒரு வேலையை ஆரம்பிப்பார்கள். சில அசௌகரியங்கள் ஏற்படுமானால் அவற்றைக் கண்டு பயந்து கொண்ட கருமத்தைக் கை நழுவ விடுவார்கள். பிறகு தைரியம் ஏற்பட்டு மறுபடியும் துவக்க எண்ணுவார்கள். செய்து செய்து காரியசித்தி யடையாமல் தோல்வியே அடைவார்கள். அநேகர். கருமத்தைச் செய்து முடிக்கக் கூடியதிறம் அவர்கட்கிருக்கலாம். ஆனால் மனோதிடம் அவர்கட்கில்லாத காரணத்தால் தோல்வியே யடைகிறார்கள் என்பதை நீ மறவாதே!

உயர் நிலையடைய எண்ணும் எவரும் தம் மனத்தைத்திறம் பெறச் செய்து வைத்துக் கொள்ளல் அவசியம். எக்காரியத்தையும், எச்சமயத்தும், கலங்காது எற்று நின்று நடத்தும் திடம் கொண்டதாய்ச் செய்து வைத்தல் மிக்க அவசியம் "எனக்கு இன்னம் 10 வருஷந்தான் உயிர் வாழமுடியும் என்றிருந்தால், 9 வருஷகாலத்தை என்மனம் திடப்பட்டு வர வேண்டியதிலேயே செலவு செய்வேன். 10 வது வருஷம் கோரிய காரியத்தைத் துவக்கிச் செய்து முடித்து இறப்பேன்" என்றார் ஓர் டெரியார்.

ஜனங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். 'நான் செய்வேன்' என்பார் ஒரு பகுதியினர். 'நான் செய்யேன்' என்பார் மற்றோர் சாரார். 'என்னால் முடியாதே' என்பார் மூன்றாம் இனத்தவர். எதையும் செய்யவிடாது முட்டுக் கட்டை போடக் கூடியவர் இரண்டாம் கூட்டத்தினர். காரியங்களைச் செய்ய வெண்ணித் தோல்வியடைபவர் மூன்றாங் கூட்டத்தவர்.



முதல் கூட்டத்தவருள் ஒருவராய் நீ ஆக முயல். மனிதராய் பிறந்து வளர்ந்து ஏதோ உலகத்திற்கு நன்மை செய்தாய் உலகம் ஏற்கட்டும்!

தானும் செய்யாது பிறர் செய்வதையும் தடுக்கும் கூடத்தவர்கள் சீக்கிறம் மறக்கப்படுவார்கள். முன்னேறாதவர்கள் பின்னடைவார்கள். திகைத்து நின்றால் பிறர் முயற்ச்சியின் வேகம் உன்னைத் தாக்கி உன்னைக் கீழே அமிழ்த்தும். அது உன்னை மாய்க்கும். மனோதிட மில்லாதவன் நீராவியில்லாத என்ஜினுக்கு ஒப்பான். நீராவியில்லாத என்ஜின் ஓடுமா? வேலை செய்யுமா? பூமிக்குப் பாரமாய் இருப்பதுவே யல்லாது வேறு யாது பலன் அசனாலுண்டு.

மானிட வாழ்க்கைக்கு மனோதிடமே முதுகெலும்பாகும் முதுகெலும் பில்லாதவன் நிமிர்ந்து நிற்கமுடியுமா? உயிர் வாழ்வது தான் எவ்விதம்?

"மனோதிடங்கொண்டு ஆரம்பிக்கும் காரியத்தில் நீ வெற்றியே யடைவாய்" என்றார் ராத்ஸ் சைல்ட் என்னும் கோடீஸ்வரர். "காரியம் சிறிதெனினும், எக்கஷ்டமிருந்த போதிலும், அதனை முடிக்காமல் விடாதே" எனக் கிளாட்ஸ்டன் பிள்ளை

களுக்குப் புத்தி சொல்வதுண்டு. மனோதிடங் கொண்டு செய்யாத காரியம் சிதைவுறும். அவசரப்பட்டுச் செய்வதினும் அது கேவலமானது. செய்வோமா-விடுவோமா, முன்னேறுவோமா பின்னடைவோமா எனப் பலவாறாக யோசித்துக் கொண்டிருப்பவனும், சிறு சிறு விஷயங்களிலும் மயிர் பிளந்து கணக்கிடுபவன் போல் யோசித்து யோசித்துக் கலங்கிடுபவனும், எக்காரியத்தையும் செய்து முடிக்க மாட்டார்கள்.

திடங் கொண்டவர்களது நிலைமை வேறு. அவர்களை நீ அளக்க முடியும். இவ்வளவு செய்து முடிப்பார்கள் என அவர்களைப் பொறுத்த வரையில் நீ நம்பி யிருக்கலாம். பிறரால் முடியாது என விடப்பட்டிருந்த அநேக காரியங்கள் சிலரால் முடிக்கப் பெற்றிருப்பதை உலகம் அறியும்.

ஆகாரம் ஒன்று மில்லாது நீயும் உன் சைந்நியமும் இவ்விடத்தில் முற்றுகையிடப் பட்டிருந்தால் நீ என்ன செய்வாய்?' என்று கேட்டதற்கு; "எதிரிகையில் ஆகாரம் உள்ள வரையில் நான் கவலைப்படத் தேவையில்லை" என நப்போலியன் என்ற சுத்த வீரன் சொன்னான். சைந்நியப் பயிற்சி மாணவனாக விருந்த காலத்தில் நெபோலியனுக்கிருந்த மனோ திடத்தைக் கவனித்தாயா?

" இந்தக் கணவாய் வழியாய்ப் போக முடியுமா " எனத் தனது தளகர்த்தனைப் பார்த்துக் கேட்டான் நெபோலியன்.

' கூடும் ' எனத்தயங்கித் தளகர்த்தன் பதிலுரைத்தான்.



"கூடியதுதானே? அப்படியானால் முன்னேறுங்கள்" என உத்தர விட்டான்.

சைந்நியம் முன்னேறியது. வெற்றியும் பெற்றார்கள். மனோதிட மில்லாது திரும்பி யிருந்தால் வெற்றி எவ்விதம் கிடைக்கும்?

ஓர் தளகர்த்தன் தன்கீழிருந்த சேவகன் ஒருவனைத் தன் கையிலிருந்த சவுக்கால் அடிக்க, அந்தச் சேவகன் தன் கைத் துப்பாக்கியால் தளகர்த்தனைச் சுட்டான். குறிதப்பியது. தன்னைச் சுட்டதற்காக அவ்யுத்தவீரன் மேல் தளகர்த்தனுக்கு கோபம் வரவில்லை. ஆனால்,

"நீ குறிதவறிச் சுட்டாய். எந்நேரமும் ஆயத்தமாயிருக்கும் நிலைமையில் உன் கைத் துப்பாக்கியை நீ வைத்துக்கொள்ளவில்லை. யுத்தவீரனுக்கு இது ஓர் அபகீர்த்தி. உன்னை ஓர் சுத்தவீரன் என்று கொள்ள முடியவில்லை. ஆகவே, உனக்கு 3 நாளைக்கு உப்பில்லாச் சோறு போடும்படி உத்தரவிட்டிருக்கிறேன்" என்றான்.

தன்னைச் சுட்டானே என்ற கவலை தளகர்த்தனுக்கு ஏற்படவில்லை. தன் கீழுள்ளவன் சுத்தவீரனாக வில்லையே என்ற கவலை அவனை யதிகம் பாதித்தது. இதன் இரகசியம் என்ன?

உலகம் ஓர் யுத்தகளம். நீ அதில் ஒருவீரன். எந்த எதிரி எந்த நேரம் வந்து தாக்குவான் என்பது தெரியாது.

மனோ திடமில்லாது நீ மயங்குவாயானால் போட்டி என்னும் யுத்தத்தில் அடிப்பட்டு மடிவாய். கொண்ட கருமத்தில் வெற்றியே பெறுவேன் என ஒரே மனதாய் எந்நேரமும் ஆயத்தமாயிரு.

அளவில்லா துன்பங்களுக்கிடையே பெருங் காரியங்களைச் செய்து முடித்தவர்கள் அநேகருண்டு. மனோ திடமில்லாமல் அவர்கள் அக்காரியங்களைச் செய்து முடித்திருக்க முடியுமா?

வியாதியால் அடிப்பட்டு, தரித்திரத்தில் மூழ்கியிருந்த மில்டன் மனோ திடமில்லாமல் பெருங் காவியங்களைச் செய்திருக்க முடியும் எனக் கருதுகிறாயா? இரண்டு கண்களும் இழந்திருந்த கவியரசர் மாம்பழக் கவியின் மனோதிடந்தான் என்ன!

டார்வின் என்னும் தத்துவ சாஸ்திரியார் வியாதியில் துன்பப் படாத நாளேயில்லை யென்று அவரது மனைவியார் சொல்லியுள்ளார். தினந் தினம் வியாதியில் உபத்திரவப் பட்டிருந்தும், அவருடைய ஆராய்ச்சிகளை நிறுத்தியதே யில்லையாம்.

“ எனக்குச் சுகமில்லை ” யென்று சொல்ல வெட்கப்படு. அது உன் பலக்குறைவைக் காட்டுகிறது. பலக்குறைவு ஏற்பட வேண்டிய காரணமேயில்லை. சுகக்குறைவு எக்காரணம் பற்றி ஏற்படுகிறதென்பது உனக்குத் தெரியுமா? அதனையும் நீ சுலபமாய்த் தடுத்துக் கொள்ளலாம். உன் வாழ்க்கையைச் சீராக



வும், கிரமமாகவும் நடத்திவா. “ எனக்கு வியாதி யில்லை. எனக்கு வியாதி வராது” என்று திட்டமாய் நம்பி நடந்துவா. வியாதி உன்னைப் பிடிக்கிறதா பார். அது உன்னை யணுகாது என்பது திண்ணம்.

மருந்துகளால் உலகத்தில் வியாதிகள் குணப் படுகின்றன வென்றெண்ணாதே! மனோதிடத்தால் வியாதிகள் குணப்படுவதை அறியக் கூடும். மனோதிடத்தால் தான் ஒருவன் தனது ஆயுளையும் விருத்தி செய்து கொள்ளலாம் என்பது நமது முன்னோர்கள் கொண்ட அனுபவம்.

எக்காரியம் செய்ய வெண்ணினும் அதற்கு மனோதிடம் வேண்டியது அவசியம். அவ்வாறு ஏற்படக்கூடிய மனோதிடத்தையும் ஒவ்வொருவரும் இளமை முதற்கொண்டே பயில வேண்டுவது அவசியம். எச்சமயமும் எந்நிலையிலும் அதனைச் செய்யலாம் என்பதும் உலக அனுபவம்.

எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின் (குறள்)

# 6வது - அத்தியாயம்

## ‘விதை யொன்று போட செடி யொன்று முளையா’

ஓஓலதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
யாஅது மென்று மவர் (குறள்)

“ தினை விதைத்தவன் தினை அறுப்பான். வினை விதைத்தவன் வினை யறுப்பான் ” என்பது உலக வசனம். கெட்ட எண்ணங் கொண்டு நன்மை செய்ய வெண்ணினால் நற்பலனை அது ஒருக்காலும் கொடுக்காது என்பதை யுணர்வாய்.

உலகமே ஓர் நிலைக் கண்ணாடி. நோக்கு மிடமெல்லாம் உன்னுடைய எண்ணங்களும், தோற்றங்களுமே பிரதிபலிக்கும் என்பதை யறிவாய். மனக் களிப்புடன் உலகத்தைப் பார்த்தால், உன் எதிரில் தென்படுபவை யெல்லாம் முக மலர்ச்சியுடனே உனக்குத் தென்படும். துக்கத்துடன் நீ அவற்றை நோக்கினால் அவைகளும் துக்கத்துடனிருப்பவையாகவே காண்பாய்.

பாட எண்ணுவாயாகில் பாடகர்களின் மத்தியில் உன்னைக் காணலாம். விசால நோக்கத்துடன் நீ யிருந்தால் அவ்வித நோக்கங் கொண்டவர் மத்தியில் உன்னைக் காணலாம். கோபத்துடன் நீ வெளிக்கிளம்பினால் உன் எதிர்ப்பட்டவர்கள்



எல்லோரும் கோபத்துடன் இருப்பது போலவே காண்பாய்.

நீ அன்புடன் நோக்கு வாயானால் உலகமே உன்னிடம் அன்பு காட்டுவதைக் காண்பாய். சுவற்றின் மேல் எறிந்த பந்து உன்னிடமே திரும்பி வருவது போல் உனது மன வெழுச்சியே உன்னைத் தேடித் திரும்பி வருகிறது என்பதை அறியாய்.

காலை முதல் மாலை வரையில் கெட்ட எண்ணங்களையே அநேகர் எண்ணி யெண்ணித் தங்களுக்குக் கெடுதியே தேடிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்படும் கஷ்டங்கள் எல்லாம் பிறர் தங்களுக்குச் செய்வதாகவோ, அல்லது அவை தாமாகவே வருபவை யென்றோ சொல்லித்திரிவார்கள். அவை தம்மாலேயே தேடப் பெற்றவை யென்பதையும் உணரமாட்டார்கள். அவ்வுண்மையைச் சொன்னாலும் ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள்.

உண்மையில் உன்மனம் கெடுவழி நோக்குமாயின் உனக்குத் தீமையே சம்பவிக்கும். வெறுப்பும், பொறாமையும், சந்தேகமும் கொண்டவர்களது வாழ்க்கையில் தோல்வியும், நஷ்டங்களும், கஷ்டங்களும் ஏற்பட்டுக் கொண்டே வரும். தூய எண்ணங்களுடன் எவன் சந்தோஷமாய்க் காலங் கழிக்கிறானோ அவனுக்குக் கஷ்டங்களும் வருவது மில்லை. வந்தாலும் அவை சூரியனைக் கண்ட பனிபோல் விலகும்.

மனச் சுத்த மில்லாதவர்களுக்கு எதையும் சந்தேகிக்கும் குணம் ஏற்படுகிறது. திருப்தி என்பதே அவர்கட்கில்லை. தனக் கெல்லோரும் எதிரிகளா யிருப்பதாகவே யெண்ணிக் கலங்குவான். வெயிலடித்தால் "ஐயோ வெயிலடிக்கிறதே, துன்பம்" என்பான். மழைப்பெய்தாலும் துன்பமாகக் காண்பான். வீட்டில் சோறு சரியில்லை யென்று முணு முணுப்பான். தன் சுற்றத்தாரும் தனக்குக் கெடுதி விளைவிப்பதாகவே எண்ணிக் கலங்குவான். வியாதி வருவதாக வெண்ணித் துக்கப்படுவான். இத்தகை யோருக்கு எச்சமயமும் சமாதானம் என்பதே ஏற்படுகிறதில்லை.

எங்கேயாவது பிரயாணம் கிளம்பினால், சுரத்திற்கு மருந்து, தலைவலி மருந்து, என்று பல மருந்துகளடங்கிய வைத்தியசாலை யொன்றைத் தூக்கித் திரிவார்கள். தனக்குத் தக்க ஆகாரம் கிடைக்காது என வெண்ணி ஆகார சமான்களையும் தூக்கித் திரிவார்கள். இவர்களுடைய குருட்டு எண்ணத்திற்குத் தக்க விதமாய் போன விடங்களில் வியாதியும் பிடித்துக் கொள்கிறது. போகும் இடங்களில் நல்லசோறு கிடைக்காமற் போய் விடுகிறது. என் செய்வார்கள் பாவம்.

உடுத்த உடையுடன் யாதொரு கவலையுமின்றி கையிற் காசு மில்லாமல் உலகம் சுற்றிவரும் அநேகரை நீ காணலாம். அவர்கள் எப்பொழுதும் சந்தோஷமாயிருப்பார்கள். அவர்கட்கு வியாதியும் வருவதில்லை. போன விடங்களில் அவர்கள்



பட்டினி கிடக்கும்படி யேற்படுவது மில்லை. காரணம் என்ன! அவர்களது மனமே அதற்குக் காரணம் என்பதை நீ சற்று ஆராய்ந்து பார்த்தால் தெரிந்து கொள்வாய்.

ஓர் ஊரில் மலைச்சுரம் உண்டென்று அறிந்தவனுக்குத் தான் மலைச்சுரம் பிடிக்கிறது இயல்பு. மலைச் சுரம் உண்டென்று அறியாத பிரயாணியை அது பிடிப்பதில்லை யென்பது உலக அநுபவம். "மலைச்சுரம் உள்ள ஊருக்கு வந்திருக்கிறோம் இவ்வூர் தண்ணீரைச் சாப்பிட்டால் சுரம் வரும்" என்றெண்ணிப் பயப்படுபவனுக்குக் கட்டாயம் அச்சுரம் வந்தே தீரும். ஏன்? மலைச்சுரம் என்ற எண்ணமே அவனுக்கு வியாதியை உண்டாக்குகிறது என்பது மிகையாகாது.

பிளேக் வியாதி ஓர் ஊரில் ஏற்படுமாயின் 'பிளேக் வியாதி வந்து விட்டது, அது எல்லோரையும் பிடிக்கும்" என்ற பயமே ஜனங்களுள் அவ் வியாதியைப் பரப்புகிறது. தொத்து வியாதியுள்ளவனருகில் இருந்தால் வியாதி தன்னையும் பிடித்துக் கொள்ளும்என்ற எண்ணமே வியாதிஸ்தர்களின் அருகில் இருந்தவர்களுக்கு அவ் வியாதியை உண்டாக்குகிறது என்பது சரித்திர ஆராய்ச்சிக் காரர்களின் அபிப்பிராயம்.

சில வருஷ காலங்களுக்கு முன் சிக்காக்கோ நகரத்திலுள்ள ஓர் பெரிய விடுதியில் தங்கியிருந்த ஓர் பிரயாணிக்கு மஞ்சள் சுரம் கண்டது. மஞ்சள் சுரம் ஓர் கடுமையான தொத்து

வியாதி. விடுதியின் சொந்தக் காரனுக்குப் பயம் ஏற்பட்டது. பெரிய வைத்திய நிபுணர் ஒருவரை வரவழைத்தான். நிபுணரும் வந்தார். நிலைமையை அறிந்தார். அவ்விடுதியிலுள்ளவர்களை அழைத்து ‘இந் நோயாளிக்குக் கண்டுள்ள வியாதி தொத்து வியாதி யல்ல, அதற்காக நீங்கள் ஒருவரும் பயப்பட வேண்டாம். எல்லோரும் சந்தோஷமாயிருந்து வியாதியஸ்தனுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து வாருங்கள்’’ என்று தேறுதல் சொல்லிப் போனார்.

வியாதியஸ்தனும் சுகமடைந்தான். மேற் சொல்லிய பிரசங்கத்தைக் கேட்டவர்களுள் ஒரு பெண் தவிர மற்றவர்களுக்கு வியாதி வரவில்லை. அப்பெண் மாத்திரம் “டாக்டர் அறியாமற் சொல்லுகிறார். இவ் வியாதி தொத்து வியாதி’’ என ஓர் பிரத்தியேகமான அறையில் போய் வசித்தாள். போனது முதல் அவ்வியாதி அவளை பிடித்துக் கொண்டது.

இதன் உண்மை யென்ன? மற்றவர்கள் அவ்வியாதியைப் பற்றி எண்ணவே யில்லை. ஆகவே, அதுவும் அவர்களைத் தீண்டவுமில்லை. வியாதி எண்ணமே ஒருவருக்கு அவ்வியாதியை உண்டாக்குகிறது என்பது வெளிப்படை. ஆதலின்

நீ எப்பொழுதும் வெற்றி யெண்ணமே கொள்வாயாக. தோல்வி யென்ற ஞாபகமே உனக்கேன் ஏற்பட வேண்டும்?

முதலாளி ஒருவன் தனக்கு நஷ்டம் நஷ்டம் என்று எப்பொழுதும் அழுது கொண்டே யிருப்பானேயாகில் இவ் வியாதி



யானது அவனுடைய வேலைக்காரர்களையும் பிடிக்கின்றது. அவர்களுடைய ஊக்கத்தைக் குறைக்கின்றது. அதன் காரணமாய் அவனுக்கு நஷ்டமே ஏற்படுகிறது.

முதலாளி அழுது கொண்டிருக்கையில் அவனுடைய வேலைக்காரர்கள் எவ்விதம் சந்தோஷமாயும் ஊக்கமாயும் இருக்க முடியும்? நஷ்டம் நஷ்டம் என்று எப்பொழுதும் பாடிக் கொண்டே யிருந்தால் இவனுக்கு உதவி செய்ய எண்ணுபவர்களும் முன்வர மாட்டார்கள். கீழ் நோக்குபவன் எவ்விதம் மேல் ஏற முடியும்? நஷ்ட நஷ்டம் என்று சொற்பனம் கண்டுகொண்டே யிருப்பவனுக்கு லாபம் எவ்விதம் கிட்டும்?

வியாபாரம் நன்றாய் நடக்குஞ் சமயமும், நல்ல லாபம் கிடைக்கும் சமயமும், நஷ்டம் நஷ்டம் என்று புலம்பிக் கொண்டே யிருப்பவர்களையும் நாம் தினந்தோறும் காணுகிறோம். “அதிருஷ்டமில்லை, அதில் நஷ்டம், இதில் நஷ்டம், பணமுடை, கொடுப்பவர் இல்லை, வாங்கிய பணம் கொடுக்க முடியவில்லை, என் செய்வேன், எவனிடமாவது வேலைக்கமர்ந்திருந்தாலும் சம்பளமாவது கிடைக்குமே’’ என்று புலம்பிக் கொண்டிருக்கும் பலரும் எவ்விதம் விருத்தியடைய முடியும்?

இத்தகைய பழக்க முள்ளவர்களிடம் எதிரிகள் பேசவும் பயப்படுவார்கள். பஞ்சத்தையும் பணக் கஷ்டத்தையும் பற்றிக் கதைகள் கேட்கத் தங்கள் தைரியமும் போய்விடும்

எனப் பயந்து அவர்களைக் கண்டால் பலரும் விலகிப் போவார்கள்.

மேற் சொல்லிய குணங் கொண்டவர்கள் ஓர் வீட்டில் ஒருவர் இருந்தால் போதும். அவ்வெண்ணம் வீட்டிலுள்ள எல்லோரையும் பிடிக்கும். திட புத்தியுள்ளவரும் உயர் நோக்கமுள்ளவரும் அக்கூட்டத்தில் ஒருவர் இல்லாதிருந்தால், அக்குடும்பத்தில் சமாதான மென்பதே யில்லாது கெடும்.

தண்ணீரில் மூழ்கி மடிவேன் என்ற திடசித்தம் கொண்டு தண்ணீரில் வீழ்ந்தவனை எவ்விதம் காப்பாற்ற முடியும்! பெரும் பளுவைக் கழுத்தில் கட்டிக் கொண்டு தண்ணீரில் வீழ்கிறான். அவனை அமுக்கக் கூடிய வேறு பளுக்கள் அகப்பட்டாலும் இடையே தேடிக் கொள்வான். அக்குண முடையோனை நீ காப்பாற்ற முற்படுவாயாகில் நீயும் தண்ணீரில் கஷ்டப்பட வேண்டிவரும்.

தீயில் நன்றாய்க் காய்ச்சப் பெற்ற எண்ணையில் குளிர்ந்த தண்ணீரைப் போட்டால் எவ்வாறு பெருந் தீ ஏற்படுகிறதோ அதுபோல் மனக் கொதிப்பு ஏற்பட்ட விடத்தில், அதனை அமுக்க நினைப்பதும் வீண் கொந்தளிப்பையே உண்டாக்கும்.

வியாதியைக் குணப் படுத்துவது மருந்து மாத்திரமன்று. மருந்தை விட நம்பிக்கையே குணத்திற்குக் காரணம். மருந்து சாப்பிடாமல் கோவில்களுக்குப் போவதாலும், குளங்களில் மூழ்குவதாலும பல வியாதியஸ்தர்கள் குணப் படுவதைக்



காண்கிறோம். இவற்றிற் கெல்லாம் நம்பிக்கையே காரணம். ஆகவே,

“முன்னேறுவேன்-வெற்றி பெறுவேன்” என்ற நம்பிக்கை உனக்கிருந்தால் நீ வெற்றி யடைவாய். “மனம் போல் வாழ்வு” என்னும் வசனத்தை நீ கேட்டிருப்பாய்.

நீ எப்பொழுதும் நன்மையே பேசு. நன்மையைப் பற்றியே நினை. பிறர் குற்றங்களைப் பற்றி நினையாதே. அவற்றைப் பற்றி ஆராய்ந்து ஆராய்ந்து அவ்வெண்ணங்களைக் கொண்டே உன் மனதை நிறப்பாதே!

பிறருடைய நற்குணங்களே உனக்குத் தெரியட்டும். பிறர் குற்றம் பேசுவது, பிறரைத் தூற்றுவது, உள்ளொன்று வைத்துப் புற மொன்று பேசுவது, போன்ற குணங்கள் உன் குணங்களைப் பழுது படுத்தும். அவை பல எதிரிகளையும் உனக் குண்டாக்கும்

‘குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை’ என்னும் வசனத்தை மறவாதே. முணு முணுப்பவனையும், புறங் கூறு பவனையும், தூற்று பவனையும் உலகம் ஏற்பதில்லை. அவர்களை உலகம் வெறுக்கும்.

பிறர் நன்மைகளைக் காண்பதில் உனக்கு நன்மை யுண்டு. பெருமையு முண்டு. பிறர் குறைகளை மாத்திரம் காண்பாயாகில் இருட்டில் தடுமாறுவது போல் உன் வாழ்க்கையில் தடுமாறுவாய். இது உண்மை.

சூர்ய வெளிச்சத்தை உலகம் எதிர்பார்த்து நிற்கிறது. சூர்ய வெளிச்சத்தில் மலர்கள் அலர்கின்றன. பட்சிகள் பாடுகின்றன. உயிர் வாழ்க்கையே வெளிச்சம் சாரணமாய் ஏற்படுகின்றது.

உன் மனம் வெளிச்சம் அடைவதால் ஊக்கம், சந்தோஷம் என்னும் மலர்கள் அலரும். அவை வளரும்.

இருட்டு மரணத்தின் அறிகுறி. வியாதிகள் பரவவதும் விருத்தியடைவதும் இரவில்தான். தீமைகள் இருட்டில்தான் பெரும்பாலும் நடைபெறுகின்றன. இருட்டு சைத்தானின் அறிகுறி. அதுவே அவனது இருப்பிடம்.

உன் சரீரம் உன் மனதின் தோற்றமேயாகும். அது வேறு விதமாய் இருக்கமுடியாது. அழகானவும், வனப்புள்ளவுமான எண்ணங்களையும் லட்சியங்களையும் மனதில் கொண்ட ஒருவன் குரூரமான சரீர அமைப்பைப் பெறமாட்டான். அவன் மனத்தின் தோற்றங்களின் பிரகாரமே அவனது சரீரமும் அமையும். இன்றில்லாவிட்டாலும், காலாகாலத்தில் திட்டமாய் அமையும். இதில் மாறுதல் இல்லையென்பதைத் திட்டமாய் நம்பு.

ஆகவே, உன் மனத்தைச் சைத்தானின் இருப்பிடமாக்கப் போகிறாயா? அல்லது கடவுளது திருக்கோயிலாகச் செய்து கொள்ளப் போகிறாயா? அதற்குத் தக்க விதமாகவே உனது வாழ்க்கையும் இருக்கும் என்பதைத் திட்டமாய் நம்பு.



அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங்
கடுத்தது காட்டு முகம் -- குறள்

உறுபுலி யூனிரை யின்றி யொருநாள்
சிறுதேரை பற்றியுந் தன்னா-மிறிவினால்
காற்றொழி லென்று கருதற்க கையினால்
மேற்றொழிலு மாங்கே மிகும். ---- நாலடியார்

இசையா தெனினு மியற்றியோ ராற்ற
லசையாது நிற்பதா மாண்மை -- யிசையுங்கால்
கண்டறிரை யலைக்குங் கானலந் தண்சேர்ப்ப
பெண்டிரும் வாழாரோ மற்று. ---- நாலடியார்

## 7வது அத்தியாயம்.

## காலந்தவறின் யாவுந்தவறும்

காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர் ---- (வள்ளுவர்)

நீ எப்பொழுதும் விழிப்பாய் இரு. நீ சற்று அயர்ந்திருப்பா யானால் உனது அயலான் உன்னைப் பின்னே விட்டு முன்னே செல்வான். அப்பொழுது நீ வாழ்க்கையில் தோற்றவனாவாய். முன்னேற்ற மடைந்துள்ள எல்லோரையும் கவனி. அவர்கள் முன்னேறியதற்கு முதற் காரணம், தாங்கள் எப்பொழுதும் விழிப்பயிருந்து செய்ய வேண்டிய வற்றைக் காலந் தவறாமல் செய்ததேயாகும் என்பதை அறிவாய்.

புலி சிங்கம் போன்ற காட்டு மிருகங்கள் வேட்டை யாடுவதைக் கண்டிருக்கிறாயா? அக் காட்டு மிருகங்களைப் பற்றி அறிய முடியா விட்டாலும் உன் வீட்டிலுள்ள பூனை எலி பிடிக்கும் முறையையாவது கவனித்திருக்கிறாயா? தூங்குவது போல் கண்களை மூடிக் கொண்டு அசைவற்று தன் எதிரில் எலி எப்பொழுது வரும் என எச்சரிக்கை யாகவே யிருந்து வர, சமீபத்தில் எலி வர ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து அதைத் தூக்கிச் செல்லும்.

அது போல் நீ எப்பொழுதும் ஆயத்தமாகவே இருக்க



வேண்டும். நீ எற்கும் கருமத்திற்குக் காலம் வரும்; காலம் வந்தவுடன் செய்யலாம் என்று சும்மாவிராதே! கருமத்தைச் செய்ய ஆயத்தமாகு முன் காலமும் உன்னை விட்டகலும். எதற்கும் ஓர் காலம் ஏற்பட்டிருப்பதைக் கவனி. விதை விதைத்து, நீர் பாய்ச்சி நெல் அறுத்துச் சேர்க்க காலம் ஏற்பட்டிருக்கிறது. காலம் மாறிச் செய்ய நீ எண்ணுவா யாகில் அது உனக்குக் கை கூடுமா? அது பலன் கொடுக்குமா?

உழவுக்குக் காலம் வருமுன் கலப்பை முதலிய தளவாடங்களைக் குடியானவன் சேகரித்து வைத்துக் கொண்டாலன்றி பலன் பெற ஒன்றையும் செய்துகொள்ள முடியாது என்பது திண்ணம். காலம் வந்தபின் தளவாடங்களைச் சேகரிக்க முயல்வது பலன் தருமா?

செய் கருமத்தில் அசட்டையா யிருப்பவன் பிறர் சமாதானத்தையும் அமைதியையும் சீர் குலைப்பான். தன்னுடன் பழகும் எவர்க்கும், மனக்கொதிப்பு உண்டாகும்படி, காலத்தின் அருமை அரியாத ஒருவன் நடந்து கொள்வான். சொன்ன பிரகாரம் எதையும் செய்யான். 8 மணிக்கு வருவதாகச் சொல்லி 10 மணிக்கு வருவான். வண்டித் தொடர் சென்ற பின் இருப்புப்பாதை ஸ்தானம் சேர்வான். பெட்டியைப் பூட்டியபின் தபாற் பெட்டியில் தபால் போடுவான். தான் எடுக்கும் காரியத்தை ஒரு சமயமும சரிவர முடிக்க மாட்டான். இதன் காரணமாய் உலகம் இவனைப் பிரத்தியேகமாய் விலக்க கடவுளையும்,

அதிருஷ்டத்தையும் நொந்து தூற்றத்தலைப்படுவான். இக் கூட்டத்தில் நீயும் சேர்ந்து கொள்ளப் போகிறாயா?

உன்னைப் பண் படுத்திக் கொள்ளவும் ஓர் காலம் உண்டு. காலம் என்பதே தனது பூஸ்திதி என்றார் ஓர் விற்பன்னர். இந்நிலத்தைப் பண் படுத்தினாலன்றி உன் வாழ்க்கையில் யாதொரு பலனும் அடையமுடியாது என்பதைத் திட்டமாய் உணர்வாய்.

ஏற்கு முறையில் திருத்தினால் தக்க பலனைக் கொடுக்காமற் போகாது. அதனைத் தரிசாகவிருக்க விட்டால் உதவாத புல் பூண்டு, வேண்டாத விஷமூலிகைகள், செடி கொடிகள் படர்ந்து உன் வாழ்க்கையைப் பலனற்றதாகச் செய்யும். இடைவிடாமல் வேலை செய்து கொண்டு வருவதால் ஓர் நற்பலன் உண்டு. தீமையினின்றும் ஒருவனை அது விலக்கும்.

சோம்பேறிகளின் மூளை பிசாசுகளின் வேலைக்களம். சோம்பேறியே பிசாசின் தலையணை. வேலையில்லாத நேரம் பல தீய நினைவுகள் உன்மனத்திற் செல்லும். ஒருவனைக் கெடுவழியிற் புகுத்தும். ஆகவே,

காலா காலத்தில் உன்னைப் பண் படுத்திக் கொள்ளாவிடில் உன் வாணாள் வீணாளாகும். உன்னை மேல் உயர்த்த, உன் காரியங்களில் வெற்றி யுண்டாக்கச் சமயங்கள் எப்பொழுதும் வந்து கொண்டேயிருக்கும் என்றெண்ணி விடாதே. இச் சமயம் போய் மறுசமயம் வரட்டும் என்றெதையும் விடாதே.



சந்தர்ப்பம் ஏற்பட்டதும் அதனை ஒரே பிடியாய்ப் பிடித்து நட. சந்தர்ப்பம் பலன் கொடுக்கும் நிலையில் நீ உன்னை வைத்துக் கொள். கிட்டும் உபாயங்களை விட்டு விடாது அனுசரித்துத் தேறும் ஆசை உனக்குண்டானால் எச் சமயமும் நற்சமயமே.

எதிர் பாரா விதமாய்ச் சம்பவிக்கும் காரியங்கள் ஒருக் காலத்தும் ஒருவனை முன்னேற்றாது. சம்பவிக்கும் சமயம், காரியத்தை ஏற்று நடத்தும் திறத்தில் ஒருவன் தன்னை வைத்துக் கொள்ளவேண்டும். ஓர் தொழிற் சாலையில் தலைமை ஸ்தானம் காலியானால் அந்தஸ்தானத்திற்கு அதற்கு அடுத்தாற் போல் உள்ளவரே உரிமையுள்ளவர். அவ் வுரிமையாளர், தலைமை ஸ்தானத்தை ஏற்று நடத்தும் திறம் பெற்றிருந்தாலன்றி அந்த ஸ்தானம் அவருக்குக் கொடுக்கப்பட மாட்டாது என்பது வெளிப்படை.

ஸ்தானம் காலியாவது எப்பொழுது என்பதை யறியாய். எப்பொழுதும் காலியாகவே யிராது. காலியாகும் சமயம் அதனை ஏற்க நீ அருகதையில்லா திருந்தால் அச்சமயம் தவறும். ஒரு சமயம் தவறினால் மறுசமயம் கிட்டும் என்று எண்ணமுடியவே முடியாது. ஆகவே நீ எப்பொழுதும் ஆயத்தமா யிருக்கவேண்டும். ஆயத்தம் குன்றினால் பிறகு உன் வாழ்க்கையில் வெற்றி பெறவே முடியாது.

ஒரு நிமிஷ நேரத்தில் எக்காரியத்தையும் ஏற்று நடத்தும் யோக்கியதையைத் தேடிக்கொள். சரியான சமயத்தில் ஆயத்த

மாயிராத வீரர்கள் யுத்த களத்தில் உயிர் விட்ட கதைகளை நீ அறிந்திருப்பாய். போட்டி யென்னும் யுத்தத்தில் நீ அசட்டையா யிருந்தால் இருந்தவிடம் தெரியாமல் நீ மடியும்படி ஏற்படும் என்பதை யுணர். முன் எச்சரிக்கையாயிருந்து அடுத்து அடுத்து வரும் சமயத்தைக் கைவிடாமல் முயன்றோர் அடைந்துள்ள பெருங் காரியங்கள் உனக்கு ஆச்சர்யத்தைக் கொடுக்கும்.

வெற்றி பெற்றுள்ளவர்களின் சரித்திரங்களைக் கவனி. சமயம் வந்ததும், தாங்கள் ஏற்ற கருமத்தைத் திடமனத்துடன் முன் வந்து, " இக்காரியத்தைச் செய்தே முடிப்பேன் " என்று சொல்லி வெளியேறி யிருப்பதைக் காண்பாய். தற்சமயத்தை விட்டு வருஞ்சமயத்திற்குக் காத்திருப்பாயானால் அச்சமயம் வராமலே போய் விடும். ஆகவே,

நீ ஒருக்காலும் தூங்காதே. மின்சார சக்தி எப்பொழுதும் உன்னுள் இருப்பதுபோல் "சமயம் எப்பொழுது வரும் எப்பொழுது வரும் " என எதிர் பார்த்த வண்ணமாயிரு.

பாரிஸ் நகரம் பெருங் குழப்பமாயிருந்த ஓர் சமயம் ஓர் தளகர்த்தர் என்ன செய்வதென்று அறியாது திகைத்து நின்றார். அவர் அருகில் இருந்த ஒருவன், " இதனைச் செய்து முடிக்க வல்லவன் ஒருவனே யுண்டு " என்றார். " அவனைக் கூப்பிட்டு வா " என தளகர்த்தர் சொல்ல, அவ்வுத்தரவிற் கிணங்க நெப்போலியனைக் கொண்டு நிறுத்தினார்கள். நெப்போலியன் வசம்



சைந்நியத்தை ஒப்புவித்துக் குழப்பத்தை அடக்கும்படி வேண்டிக் கொண்டனர்.

நெப்போலியன் முதலில் கலவரத்தை யடக்கினான். அடுத்தாற்போல் அதிகாரிகளைத் தன் கீழாக்கினான். பிரான்ஸ் தேசத்தையே தன் வயப்படுத்திக் கொண்டான். ஐரோப்பாவையே ஆட்டுவித்தான். சமயம் கிட்டியதும் அதனை விடாது கருமத்தை ஏற்கும் திறம் பெற்றிருந்த படியால் அவ்வுயர் நிலையை நெப்போலியன் பெற்றான்.

ஆஸ்திரியாவுடன் நெப்போலியன் யுத்தத்திற்குச் சென்ற சமயம் ஓர் அதிசய சம்பவம் ஏற்பட்டது. பிரான்ஸிய சைந்நியம் ஓரிடத்தில் ஓர் பாலத்தைத் தாண்ட வேண்டியிருந்தது. எதிரிகள் பாலத்தின் எதிர்ப் பக்கத்தில் பீரங்கிகளைக் கொண்டு நிறுத்தி பலப்படுத்திக் கொண்டிருந்தார்கள். நெப்போலியனுடைய சைந்நியம் அருகில் வந்ததும் ஆஸ்திரிய படைகள் நெருப்பு மாறி பொழியத் தலைப் பட்டார்கள். அச்சமயம் எதிரிகளை விரட்டிப் பாலத்தைக் கைப்பற்றா விட்டால் நெப்போலியன் நிலைமை மிகவும் கேடாக முடியும்.

நிலைமையைக் கவனித்தான் நெப்போலியன். ஆறாயிரம் போர் வீரர்களுடன் முன்னேறினான். முதல் வரிசைக் குண்டில் பலர் மாண்டனர். இதைப் பொருட்படுத்தாமல் வெகு வேகமாய் முன்னேறும் படியாய்த் தன் வீரர்களுக்குக் கட்டளையிட்டான். அவ்விதமே அவர்களும் செய்தார்கள். இவர்களது

ஸ்ரீ சிவகுருநாத குருபீடம்

தீரத்தைக் கண்டு எதிரிகள் பயந்து ஓடத்தலைப்பட்டார்கள். நெப்போலியன் வெற்றியடைந்தான். எதிரிகள் எச்சரிக்கையாவதற்கு முன் எதிரிகளின் பீரங்கிகளின் எல்லையைக் கடந்து முன்னேறி விட்டபடியால் எல்லா பீரங்கிகளும் பலனற்றவையாயின.

இந்த இரகசியத்தை யுணர்ந்து நெப்போலியன் காலத்தைக் கை நழுவ விடாமல் முன்னேறினான். காலத்தைக் கவனியாது காத்திருந்தால் நெப்போலியன் கதி அதோகதிதான்!

தன் தன் லட்சியத்தையடைய ஆரம்ப முதலே ஒருவன் வேலை செய்து வரவேண்டும். ஒருவன் முன்னேற்ற மடைய பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுக் கொண்டே வரலாம். அவ்விதம் ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் தனக்குப் பயன் கொடுக்கக் கூடிய விதமாய்ச் செய்து கொள்ளவே வேண்டும்

தனது வருங்கால வாழ்க்கைக்கான முறையில் தன்னைப் பண்படுத்திக் கொள்ளவேண்டி ஒருவன் இளமையிலேயே பாடுபட வேண்டியது அவசியம். அவ்வாறு செய்யாது கழிக்கும் நாளெல்லாம் திரும்பப் பெற முடியாத ஓர் பெருநஷ்டம் என்பதைத் திட்டமாய் நம்பு.

சந்தர்ப்பங்கள் எப்பொழுதும் உன்னைச் சுற்றிலும் நிறைந்திருப்பதாகவே கொள்ளலாம். அவற்றை உபயோகப் படுத்திக் கொள்ளக் கூடிய நிலையில் உன்னை நீ வைத்துக் கொள்ளவேண்டும். யுத்தத்திற்கு உன்னை வந்து எழுப்புவதுபோல் சந்தர்ப்பங்



கள் உன்னை வந்து தட்டி எழுப்பும். சப்தம் மாத்திரம் யுத்தத்தை வெல்லாது. யுத்த வீரர்களல்லவோ யுத்தம் செய்ய வேண்டும். யுத்த வீரர்களிடம் ஆயுதங்களும் தளவாடங்களு மில்லாதிருந்தால் எதிரிகளிடம் அடிப்பட்டு மடிய வேண்டியவர்கள் தானே! நீ ஏன் இவ்வுண்மையை அறியலாகாது?

காலம் என்பதைக் கிரேக்கர் வெகு திறமையாய் வர்ணித்திருக்கிறார்கள். அதனை ஓர் மனித உருவமாக அமைத்து ஓர் சிலையும் செய்து வைத்திருக்கிறார்கள். அச்சிலையும் அதன் கீழ் எழுதி வைத்திருப்பதையும் கவனிப்பவர்கட்குப் பல வுண்மைகள் வெளியாகும்.

உருண்டையான ஓர் சல்லியின் மேல் தன் கால் பெருவிரல் ஊன்றி ஓடும் நிலைமையில் ஓர் மனிதன் நிற்பது போல அச்சிலை செய்யப் பெற்றிருக்கிறது. அதன் கால்களில் இரண்டு சிறு இரக்கைகள் உண்டு. முகத்தைக் கவனித்தாலோ இளமைப் பருவந் தோன்ற ரோமம் காட்டப் பெறவில்லை. முன்னந் தலையில் மயிர் நிறைந்த சடை யொன்று தொங்கிக் கொண்டிருக்கிறது. பின்னந் தலை மொட்டை. இதுவே 'காலம்' என்பதன் உருவம்.

அவ்வுருவத்தின் தத்துவத்தை விளக்க ஓர் கிரேக்க கவி பின் வருமாறு எழுதி வைத்திருக்கிறார்.

'நீ யார்?'

'உலத்தை யழுக்கும் காலச் சக்கிரம் நானே.'

'நீ யேன் பெருவிரலில் நிற்கிறாய்?'

'நான் எப்பொழுதும் வெகு வேகமாய் ஓடிக் கொண்டிருப்பவன்.'

'உன் கால்களில் இரக்கைகள் ஏன்?'

'காற்றைப் போல் நானும் பறப்பேன்.'

'உன் கையில் க்ஷவரக் கத்தி யேன்?'

'வாணாளை யறுப்பதில் க்ஷவரக் கத்தியை விடக் கூர்மை யானவன் நான் என்பதை உலகத்தார் அறியும் பொருட்டே.'

'உன் முன் தலையில் சடை யேன்?'

'யுத்தி யுள்ளவன், முன் யோசனை யுள்ளவன், நான் எதிர்ப் பட்டவுடன் என்னைப் பிடித்துக் கொள்வே.'

'பின்னந் தலை மொட்டை யேன்?'

'ஒரு சமயம் என்னை விட்டவன் மறு சமயம் என்னைப் பிடிக்காதிருக்கவே'

'உன்னை ஏன் இப்படிச் செய்தான்?'

'உன்னை உத்தேசித்தே. உன் வாணாளைப் பற்றி நீ எச்சரிக்கை யாயிருக்கவே என்னை உன் வீட்டு வாயிற் படியில் வைத்திருக்கிறான்.'



காலம் எவ்வளவு அருமையான தென்பதை நீ உணரவில்லையா? சமயந் தவறினால் மரணம் என்பதை நீ அறிய வேண்டாமா? செலவான காலத்தை நீ மறுபடியும் தேடியடைய முடியாதென்பதை உணர வேண்டாமா? காலந் தவறியதனால் நாடிழந்த மன்னர்கள் பலர் உண்டென்றறியாயோ? இக்காரணமாய்க் கோடீஸ்வரர்கள் கெட்டனர் பலர். இதனால் உயிரிழந்த வீரர்கள் பல கோடி. இவற்றையெல்லாம் உணர்ந்த நீ காலந் தவறி நடக்கலாமா?

கிரமம் வேலைக்கு முக்கியம். அதிக வேலையைக் குறைந்த காலத்தில் செய்து முடிக்கும் திறத்தை அது கொடுக்கும். ஓர் பெட்டியில் சாமான்களைக் கிரமமாய் அடுக்குபவன் அதிகஞ் சாமான்களை அடுக்குவான். அதுபோல் காலா காலத்தில் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்பவர்கள் அதிக வேலையைச் செய்வார்கள் என்பது வெளிப்படை.

"நீங்கள் எவ்விதம் இவ்வளவு வேலையைச் செய்து முடிக்கிறீர்கள்" என ஓர் பிராஞ்சிய மந்திரியைக் கேட்டதற்கு "மற்றொன்றுமில்லை. இன்று செய்ய வேண்டியதை நாளைச் செய்யலாம் என்று ஒருக்காலும் ஒத்தி வைத்ததில்லை" என்றனர்.

நீ செய்ய வேண்டிய காரியத்தைக் காலந் தவறாமல் நீயே செய்ய முயல். அக்காரியம் முடியாமற் கெட வேண்டுமானால் ஓர் ஆளை நீ அனுப்பினால் போதும். நீ கவனியாத காரிய

உனக்குத் திருப்தியைக் கொடுக்கும் படியாய் முடியாது.

உத்தியோகம் பெற்று புத்தி மதி சொல்லும்படி கேட்ட ஓர் வாலிபனுக்கு சர் வால்டர் ஸ்காட் என்னும் மேதாவி பின்வருமாறு எழுதினார்:-

"உன் காலம் முழுவதும் வேலையிற் கழியாமல் சிறிது அவகாசமிருந்தால் ஒருவித கெடுமதி உன்னைச் சுற்றிக் கொள்ளும். அதற்கு இடம் கொடுத்து விடாதே. பத்திரம். வீண் பொழுது போக்கு எனப் பெண் பாலர் இதனையே சொல்லுவார்கள். செய்ய வேண்டியவற்றை உடனே செய்து முடிப்பதுவே நீ அனுசரிக்க வேண்டிய விதியாக விருக்கட்டும். வேலை முடிந்த பிறகே யல்லாது வேலை முடியுமுன் இளைப்பாறவும், விநோதங்கள் காணவும் எண்ணாதே! பட்டாளம் வழி நடக்கும் சமயம் முன்னணி வீரர்கள் தடையின்றி நடை கொள்ளா விடில் பின்னணி பெரும்பாலும் குலைந்து சிதறும். வேலையின் இயற்கையும் இதுவே. முத முதல் செய்து முடிக்க வேண்டிய காரியத்தை அப்பொழுதே விட்டு விடாமல் கிரமமாய்ச் செய்து முடிக்காதிருந்தால் பின்பு வேறு வேலைகள் திரளாய்ப் பெருகும். பெருகவே நாளு வேலைகளும் ஏககாலத்தில் வந்து பிடித்துக் கொள்ளும். இந்த அமர்க்களத் தலை விட்டு நீங்கி நிதான புத்தியடையும் திறம் எந்த மனிதனுக்கும் இல்லை,

மேற் சொல்லிய வாக்கியங்களை எப்பொழுதும் உன்



மனத்தில் பதிவு செய்து கொள்ளவும். அதுவே உனது அபிவிருத்திக்கு அஸ்திவாரம். இதனை மறவாதே!

பருவத்தோ டொட்ட வொழுக திருவினைத்
தீராமை யாறுக்குங் கயறு. (குறள்.)

அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின். (குறள்.)

## 8வது அத்தியாயம்.

## பொறுத்தார் பூமியாள்வார்

கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து. (வள்ளுவர்)

"தன்னை யடக்கிக் கொள்ளக் கூடியவனே கல்விமான். பிறர் எவ்விதக் கல்வி கேள்விகளிற் றேர்ந்திருந்த போதிலும் அவற்றால் யாதொரு பயனும் பெறார்" என்றார் ஓர் விற்பன்னர். தன்னை யடக்கியாள முடியாதவன் யாதொரு காரியத்தையும் சாதித்து முடிக்கமாட்டான். தன்னை யடக்கிக் கொள்ளாத காரணத்தால் அழிந்தவர் பல கோடி யுண்டு. எவ்வளவு புத்திசாலிகள், படித்தவர்கள், உயர் நோக்க முடையவர்கள், செல்வந்தர்கள் தங்கள் தங்கள் கோபத்தை யடக்கிக் கொள்ளாதவர்களாகி எதிரிகளைச் சுட்டும், வேறு விதமாய்த் துன்புறுத்தியும் காராக்கிரகங்களில் உழல்கிறார்கள் என்பதை அறியாயோ?

பேராசை, கோபம், பொறாமை காரணமாய் எவ்வளவு பேர் நமது நாட்டுச் சிறைச் சாலைகளில் காலங் கழிக்கிறார்கள் என்பதைக் கவனி. தங்களது தீய குணங்களை அவர்கள் அடக்கிக் கொண்டிருப்பார்களேயாகில் அவர்களுடைய பிறநற்



குணங்களாலும் தொழில் திறத்தாலும், நமது நாட்டிற்கு எவ்வளவு நன்மைகளைச் செய்திருக்கக் கூடும் என்பதையோசி.

ஒரு நிமிஷ நேரம் தங்கள் கோபத்தை யடக்க முடியாமல் அவர்கள் எவ்வளவு பொருள் நஷ்டம், சுதந்தர மின்மை, கேவல நிலைமை முதலிய வற்றை யடைந் திருக்கிறார்கள் என்பதைப் பார்.

தங்கள் கோபங் காரணமாய் எவ்வளவு பேர் தங்கள் உத்தியோகங்களை யிழந்து சாப்பாட்டிற்குங் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை யறியாயோ? அவர்களிருந்த உயர் நிலையை யடைய எவ்வளவு வருஷம் கஷ்டப் பட்டிருப்பார்கள்? எவ்வளவு சிரமங்களை யனுபவித்திருப்பார்கள்? அவ்வளவும் ஒரு நிமிஷ நேரத்தில் அழிந்து போயின வென்பதை நீ காண்கிறாயா?

ஓர் கைத்தொழில் நிபுணர்; மகா புத்திமான்; தன் தொழிலில் இணையற்றவர்; பல வருஷகாலம் உயர் நிலையை யடையாது கஷ்டப் பட்டுக் கொண்டிருப்பதைப் பற்றி ஆராய்ந்த காலத்தில் அவருடைய முற்கோபமே அதற்குக் காரணம் என்பது வெளியாயிற்று. தன் கீழ் வேலை செய்யும் தொழிலாளர்களை அடியாத நாளில்லை. சிலசமயம் தன் முதலாளியையும் அடிப்பார். இரண்டொருவர் அவரது திறமையை எண்ணி வேலைக்கமர்த்திக் கொண்டனர். கடைசியாக ஒருவரும் அவரை விரும்ப வில்லை. ஏன்? அவருடைய குணத்தால்? அவருடைய தீய குணமே

அவருடைய முன்னேற்றத்திற்கு ஓர் பெருந் தடையாயிருந்தது.

பொறுமை வேலைக்காரனுக்கு மாத்திரமன்று, முதலாளிகளுக்கும் அவசியமானது. முதலாளி எவ்வளவு பணக்காரராயிருந்தும் கோபம் அவரிட மிருந்தால் அவர் மேல் ஓங்குவது மிகவும் சிரமம். கோபம் வந்த சமயம் தனது பற்று வரவு ஆசாமிகளை வாயில் வந்த பிரகாரம் திட்டுவான். தனக்குப் பொருள் கொடுப்போனையும் திட்டுவான். தன் வேலைக்காரர்களைத் துரத்தி யடிப்பான். இவனுடன் ஒருவரும் பற்று வரவு செய்ய எண்ணார்கள். ஒரு வேலைக்காரனும் வேலைக் கமரான். கோபம் வந்த சமயம் இவனிடம் பொருள் அபகரிக்கலாம் என்றெண்ணுமவர் நீங்கலாக பிறர் இவனுடன் யாதொரு கூட்டுறவும் வைத்துக் கொள்ளச் சம்மதியார்கள். இத் துர்க்குணத் தால் எவ்வளவோ பேர் பெருநஷ்டமடைந் திருக்கிறார்கள் என்பதை யறியாயோ?

கோபம் வந்த காலத்தில் சிலர் தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை யறியார்கள். பைத்தியம் பிடித்தவர்கள் போல் நடந்து கொள்வார்கள். இன்னது பேசுகிறோம், எவரது முன்னிலையில் இருக்கிறோம் என்பது அறியாமல் நடந்து கொள்வார்கள். தன் எதிரிலுள்ளவற்றைத் தூக்கி யெறிந்து உடைப்பார்கள். கையில் வைத்திருப்பவற்றைக் கொண்டு எதிர்ப்பட்டவர்களை அடிப்பார்கள். மண்டை யுடைக்கப் பெற்றும் சாமான்கள் உடைக்கப் பெற்றும் அலங்கோலமாய் டயலடித்த



களம்போல் தன்னெதிரில் இருப்பதைக் கண்டு கோபந் தணிந்த பின் வருந்துவார்கள்.

கோபம் வந்த சமயம் தன் சக்திக்கு அதிகப்பட்ட காரியங்களைச் செய்து, தணிந்த பின் ஆயாசப் பட்டுப் படுப்பதை நீ அநேகரிடம் காணலாம். அக்கோபத்தால் அவனது பலம் எவ்வளவு பழுது பட்டிருக்கும் என வெண்ணுகிறாய்.

கோபமே ஒருவனுடைய ஆயுளைக் குறைக்கும். கோபம் வந்த காரணத்தால் பலருக்குச் சரீரத்தில் நடுக்க மேற்பட்டுப் பலமணி நேரங்கள் வரையில் அவர்கள் யாதொரு வேலைக்கும் பயனற்றவர்களாவதை நீ அறியாயோ? கோபம் வந்த சமயம் அநேகருக்கு அவர்களுடைய ரத்த நரம்புகள் வெடித்து உயிர் விட்டிருப்பதைப் பற்றிக் கேள்விப் பட்டதில்லையா? கோபம் வந்து தணிந்த பிறகு அநேகருக்குத் தலைநோய் ஏற்படுவதை நீ அறிந்திருக்கக் கூடும். அநேகருக்கு அது மூளை நோய்களை யுண்டாக்கியுள்ளது. பலருக்கு அது பக்கவாதத்தை யுண்டாக்கியுள்ளது என வைத்திய நிபுணர்கள் சொல்லுகிறார்கள். கோபம் வந்த சமயம் செய்த முட்டாள் தனமான காரியத்தைக் கண்டு பிறகு வெட்கப் பட்டுத் தலை குனிந்து நடக்கும்படி ஏற்படவில்லையா?

அதன் காரணமாய் ஒருவனது மரியாதை எவ்வளவு கெடுகிறதென்பதைக் கவனித்தாயா? கோபக் காரணமாய் உன்

உற்றார் உறவினர்களை இழப்பாய். உன் உயிர்த் தோழர்களை இழப்பாய். உன் பொருளை இழப்பாய். உனது உயிர் நிலையான தொழிலையும் இழப்பாய். நற் பெயரையும் இழப்பாய். உனக்கு வியாதி யுண்டாக்கும். சில சமயம் உனது உயிருக்கே ஆபத்து வரும். இவ்வளவு கெடுதியை யுண்டாக்கக் கூடிய கோபத்தை நீ விட வேண்டாமா?

கோபம் கொண்டவன் பூர்ண மனிதனல்ல. கோபம் ஏற்பட்ட காலத்தில் மனிதசுபாவம் விட்டுப் பிசாசின சுபாவத்தை அடைகிறான். அவனை எவ்விதம் முழுமனிதன் எனக் கூறுவது? உனது சரீரத்திலுள்ள தசை நரம்பு ரத்தம் முதலியவற்றின் கோபம் பெரு மாறுதல்களைச் செய்கிறது. திடீரெனக் கோபம் வருஞ் சமயங்களில் ஒருவருடைய இருதய கமலங்களுக்கு அளவிற் கதிகமான ரத்தம் பாய்ந்து அதில் விஷம் உண்டாகிறது என நிபுணர் கண்டு பிடித்திருக்கிறார்கள். அக் காரணத்தால் தான் கோபந்தணிந்த பின் ஒருவனுக்கு ஆயாசம் ஏற்படுகிறது.

கோபத்தால் ஏற்படக் கூடிய ரத்தக் கொதிப்பை, மனக் கொதிப்பை, சரீர படபடப்பை அடிக்கடி தாங்கக் கூடிய சரீர பலம் யாருக்குமே யில்லை எனலாம். கோபம், பொறாமை போன்ற குணங்களால் ஒருவனது சரீரத்தில் விஷமேறி அவனுடைய உயிர் நாடியின் பலத்தைக் குறைத்துக் கொண்டே வருகிறது என்பது மிகையாகாது. சாவதானமாய், படபடப்



பில்லாமல் சரீர உறுப்புக்கள் வேலை செய்ய வேண்டியவை. அவ்வாறன்றியில் திடீர் என வேகமாய் ஓடுவதும், தாறுமாறாய் ஓடுவதுமாயிருந்தால் சரீர அமைப்புகளில் பழுது ஏற்படாதிருக்குமா?

மனிதனிடத்தில் இருவித குணங்களுண்டு. தெய்வ குணம் ஒன்று. மற்றொன்று மிருக குணம். எக்குணத்தை விருத்தி செய்கிறானோ அக்குணத்தை அவன் அடைகிறான் என்பது உண்மை. மிருக குணத்தை விருத்தி செய்பவன் மிருகத் தன்மையை யடைகிறான். உருவத்தில் மனிதனானாலும் அவன் குணத்தில் மிருகமாவான். உன்னிடம் இல்லாத குணத்திற்காக நீ வருந்தவேண்டாம். அக் குணத்தைப் பெற முயற்சி செய். உனக்கும் கோபம் அனுவசியமாய் வருமானால் "என் செய்வேன் எனக்குக் கோபம் வருகிறதே! அதனை என்னால் தடுக்க முடியவில்லையே" என்று சொல்லாதே. கோபத்தை விட முயற்சி செய். எனக்கு கோபம் வராது எனத் திட்டம் செய்து கொள். பொறுமை கொள்ள முயல். முயலுவதில் ஆரம்பத்தில் சற்று சிரமமாயிருக்கலாம். ஆனால் உன் குணத்தை அடக்க சாந்த குணத்தை மேற் கொண்டு பழகிவா அக்குணத்தை நீ அடைவாய்.

தான் என்ற அகம்பாவமே உனக்குக் கெட்ட எண்ணத்தை யுண்டாக்குகிறது. உனது சுய நலமே கோபத்தையும், உனது கர்வமே பிறரிடம் பொறாமையையும் வளர்க்கிறது.

அகம்பாவமும், பொறாமையும், சுயநலமும் உன்னை ஆளாக்குமா? இவை யெல்லாம் நாயின் குணங்கள் என்பதை உணர்வாய். நல்லவர்களிடம் சண்டையிழுத்து விட்டு சஷ்டம் தேடிக் கொடுக்கும் குணங்கள் இவைகளே. மனிதனாய்ப் பிறந்து மிருகமாய் நடக்கலாமா? அது எவ்வளவு கேவலமானதென உணரவில்லையா?

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது" என்னும் வாக்கை யறியாயோ? கடவுளின் நோக்கத்திற்கு மாறாக நீ நடக்கலாமா? அது அவரது ஆணைக்கு விரோதமானதல்லவா? கோபம் வந்த காலத்தில் உனது படிப்பு உனக்கு உபயோகப்படுவதில்லை. உனது உயர் நோக்கம் உனக்குப் பலன் கொடுப்பதில்லை. பிறரால் இகழப் படுவாய். உனது வாழ்க்கையில் பெரும் விகாரமான வடுவை இக்குணம் ஏற்படுத்தி விடுகிறது என்பதை மறவாதே!

நெருப்புச் சுட்டால் குழந்தைகள் மறுபடியும் நெருப்பிடம் செல்லா. கத்தி வெட்டினால் மறுபடியும் அக்கத்தியைக் குழந்தைகள் தொடா. குழந்தைகளை விடப் பகுத்தறிவு உனக் கதிகமில்லையா? பெருங் கஷ்டங்களும் நஷ்டங்களும் கோபத்தால் ஏற்படுகின்றன வென்பது தெரிந்திருந்தும் அடிக்கடி உனக்குக் கோபம் வருவதானால், உன்னைக் குழந்தையை விடக் கீழ் தரத்திலுள்ளவன் என ஏன் சொல்லலாகாது?

கோபத்தை யடக்க இளமை முதற் கொண்டே பழக



வேண்டும். கோபகுணம் குழந்தைகளிடம் பலப் படும்படி இடம் கொடுக்கலாகாது. குழந்தைகளிடம் கோபம் வரும் சமயம் அதனை அடக்க முயலவேண்டும். அக் கோபம் அதிகப் படும்படிக் காரியங்களைச் செய்தோ பேச்சுகளைப் பேசியோ விருத்தி செய்யலாகாது.

பிறருக்குக் கோபம் வரும் சமயம் அது தணிவதற்கான முறையில் நீ பேசவேண்டும். அதனால் அவனுக்கு மாத்திரமல்ல உனக்கும் நன்மை தேடிக் கொள்கிறாய். வீடு தீப் பிடித்து எரியும் சமயம் மண்ணெண்ணெய் ஊற்றி யவிக்கும் வழக்கம் உலகத்திலில்லை. சேற்றில் ஒருவன் அகப்பட்டுழலுஞ் சமயம் அவனை அதினின்றும் எடுத்து விட வேண்டுமே யல்லாது அதில் அமுக்க வெண்ணலாகாது. அதுபோல்,

ஒருவனுக்குக் கோபம் வரும் சமயம் நீ சாந்தமாய்ப் பேசு. கோபம் கொண்டவனை அமைதியுடன் வெறிக்கப் பார்த்தால் அவனது கோபம் தணியும் என்பதற் கையமில்லை. உயிரையே மாய்க்கும் மேற் சொல்லிய தீய குணங்களைக் களைந்து பொறுமை யென்னுங் குணத்தை யடைவாயானால், நீ தெய்வ பலம் கொண்டவனாவாய்.

பொறுமையுடன் சாத்வீகமாயிருக்க எதிரி உன்னை வெல்ல முடியாது. கோபமே பலமற்ற பேடிகளின் ஆயுதமாம் தர்மரைப் போல் கோபமற்றவரைப் பற்றிக் கேள்விப் பட்ட

ஸ்ரீ சிவகுருநாத குருபீடம்
வேதாந்தமடம், யாழ்ப்பாணம்.

துண்டா? பலங்குன்றியா அவர் பொறுமையுட னிருந்தார்? எதையும் ஏற்று சகிக்கக் கூடிய உயர் சக்தி யவரிடம் இருந்த காரணத்தால் அவர் சாந்த குணம் பெற்றார்.

பொறுமையால் உலகத்தை யடக்கியவர் அநேகருண்டு. யேசு நாதரைத் துன்புறுத்திய காலத்தில் "தாங்கள் இன்னது செய்கிறோம் என்பது தெரியாமல் அவர்கள் செய்கிறார்கள். அவர்களை மன்னியுங்கள்" எனக் கடவுளது கருணைக்குத் தனது எதிரிகளை ஒப்படைக்கவில்லையா? அதனால் ஏற்பட்ட பிரதி பலன் என்ன? உலகம் அவர் வசப் பட்டு நிற்கிறது.

உலகத்தில் தோன்றியுள்ள எல்லா மதபோதகர்களையும் எடுத்துக் கொள்ளுங்கள். தங்கள் தங்கள் கொள்கைகளை நிலை நிறுத்த அவர்கள் கோபத்தை ஆயுதமாகக் கொள்ள வில்லை. சாந்தத்தையே ஆயுதமாகக் கொண்டனர் என்பது சரித்திர மூலம் அறியக் கிடக்கின்றது.

உலகத்தையே தனது படைப் பலத்தால் ஆண்டு வருவதாக எண்ணி வரும் பிரிட்டிஷ்காரர்கள் எதனால் அடக்கப் பெற்றார்கள் என்பதை யறிய வில்லையா? சாத்விகத்தா லல்லவோ? சாத்வீகம், பொறுமை, எதிரியையும் அன்புடன் ஏற்குங் குணங்கள் உலகத்தையே ஆளும் என்பதற்கு மகாத்மாவின் வாழ்க்கையே உனக்குப் போதிய அத்தாட்சி யல்லவோ? நீ விருத்தியடைய வேண்டுமானால், மேல் நிலைக்கு வந்து யாவ



ரையும் உன் வயப்படுத்த வேண்டுமானால், தூர்க்குணங்களைக் களைந்து தூய குணங்களை மேற் கொள்வாய்.

மனிதன் நடமாடுங் கோவில். உன் மனமே கடவுளது இருப்பிடம் என நம்பு. அத்திருக் கோயில் எவ்வளவு புனிதமாய் இருக்க வேண்டு மென்பதை யுணர வில்லையா? கோபம், தாபம், பொறாமை போன்ற தூர்க்குணங்களால் அக்கோயிலை அசுத்தப் படுத்திக் கடவுள் அதனுட் பிரவேசிக்கா வண்ணம் செய்து, இருள் என்னும் சைத்தானுக்கு உறை விடமாகச் செய்யப் போகிறாயா? சற்றுயோசி! உன்னை நீ உணர வில்லையா? நீ யார்? ஆறறிவு பெற்ற மனிதனல்லவா? உன் அறிவை யிழந்து மிருகமாகப் பார்க்கிறாயா? மிருகமாவதில் உனக்கு வெட்கமேற்பட வில்லையா?

மிருக பலம் உலகத்தை ஒருக்காலமும் ஆண்ட தில்லை என்பது சரித்திர உண்மை. அன்பே உலகத்தை யாண்டு வருகிறது. இந்நிலையில் நீ உன் மன மடக்கி வாழப் போகிறாயா? அல்லவா?

வெகுளியே யுயிர்க் கெலாம் விளைக்குந் தீவினை
வெகுளியே குணந்தவம் விரத மாய்க்குமால்
வெகுளியே யறிவினைச் சிதைக்கும் வெம்மைசால்
வெகுளியிற் கொடும்பகை வேறொன் றில்லையால்

(தனிச் செய்யுட் கோவை)

மூங்கிலிற் பிறந்த முழங்குதீ மூங்கின்
முதலற முருக்குமா போலத்
தாங்கருஞ் சினத்தீ தன்னுளே தன்
னுறுகிளை யெலாஞ் சாய்க்கும்
ஆங்கதன் வெம்மை யறிந்தவர் கமையா
லதனை யுள்ளடக்கவ படங்கா
தோங்கிய கோபத்தீயினை யொக்கு
முட்பகை யுலகில் வேறுண்டோ.

[தனிச் செய்யுட் கோவை]

கோபத்தாற் கௌசிகன் தவத்தைக்கொட்டினான்
கோபத்தா னகுடனுங் கோல மாற்றினான்
கோபத்தா லிந்திரன் குலிசம் போக்கினான்
கோபத்தா லிறந்தவர் கோடி கோடியே.

(விவேக சிந்தாமணி)

ஒருத்தார்க் கொரு நாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். (குறள்)

## 9வது-அத்தியாயம்.

### உனது மனச்சாட்சி என்ன சொல்லுகிறது?

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வ நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று (வள்ளுவர்)

நீ செய்யும் தொழில் உனக்குத் திருப்தியைக் கொடுக்கிறதா? உனது வருமானம் சுத்தமான வழியில் வருகிறதா? உனக்கு வரும் ரூபாயில் ஏழைகளது ரத்தம் படிந் திருக்கிறதா? ஏழைகளை ஏமாற்றிச் சம்பாதிக்க வேண்டி யிருக்கிறதா? அது நியாயமான முறையில் உனக்கு வருகிறதா? உனது மனச்சாட்சி என்ன சொல்லுகிறது?

"நான் செய்யும் தொழில் பாபம் நிறைந் துள்ளது. காலையில் வேலைத் தலத்திற்குப் போய் செய்யும் வேலைக்குத் தக்க கூலி யில்லாமல் தினம் பல தொழிலாளர்களுக்கு அரைப் பெயர் போட வேண்டி யிருக்கிறது என் செய்வது? அவ்விதம் செய்யா விட்டாலும் எனது முதலாளி என்னை தோட்டத்தில் வைத்திருக்க மாட்டார்கள்." என்று சொல்லுகிறார்கள் ஒரு பகுதியினர்.

"காலை எழுந்தது முதல் இரவு 9 மணி வரையில் எங்கள்

கடையில் சாமான்கள் வாங்க வருபவருக்கு ¾ ராத்தல் சாமான் கொடுத்து ஒரு ராத்தல் கணக்குப் போட வேண்டியிருக்கிறது. பழைய துணியை வைத்துக் கொண்டு புதிய துணியென விற்க வேண்டியிருக்கிறது. அவ்விதம் செய்யா விட்டால் எனக்குப் பிழைப்பில்லை. இவ்விதம் மோசம் செய்ய எனக்குப் பிரியமில்லை. ஆனால் நான் செய்யா விட்டால் வேறு யாராவது செய்வார்கள்' ஆதலால் என்ன? " எனச் சொல்லுவார்கள் மறுசாரர்.

எந்தத் தொழில் செய்து வருபவரைக் கேட்ட போதிலும், பெரும்பான்மையோர் தங்கள் தொழிலில் தங்களுக்குப் பிரியமில்லாதது போலவே பேசுவார்கள். அவ்விதம் பிரியமில்லாத தொழிலைச் செய்வதேன் எனக் கேட்டால் ஒவ்வொருவரும், ஒவ்வோர் விதமாய்ப் பதில் உரைப்பதைக் காணலாம். "இந்தத் தொழில் விட்டால் எனக்கு வேறு தொழுல் தெரியாது. இவ்வளவு காலம் இத்தொழிலைச் செய்த பிறகு புதிய தொழிலைச் செய்ய எவ்விதம் முடியும்? " என்பார் ஒரு பகுதியினர்.

"சில காலம் இத்தொழிலில் இருந்து கொஞ்சம் பொருள் தேடிக் கொண்டு வேறு நியாயமான தொழில் செய்ய எண்ணிக் கொண்டிருக்கிறேன் " என்பார்கள். மற்றுஞ் சிலர் 'இந்தத் தொழிலில் வரும் வருமானம் வேறு தொழிலில் எனக்கு வராது எனக்கு குடும்பமே பெரியது. அதைக் காப்பாற்று நிமித்தம்



இக்காரியத்தைச் செய்கிறேன் " என்பார்கள்.

சிலரிடம் "நீங்கள் என்ன தொழில் செய்கிறீர்கள்" என்று கேட்டால் அவர்கள் தாங்கள் செய்யுந் தொழிலைச் சொல்லவும் வெட்கப் படுவதைக் காணலாம். மற்றுஞ் சிலர் "நாய் விற்று காசு குலைக்குமா? எந்தத் தொழில் செய்தால் என்ன? பணம் வந்தால் போதும் " மிகவும் கேவலமான தொழில்களையும் மனங் கூசாது செய்வார்கள்.

நீ ஆறறிவு பெற்ற மனிதன் என்பதை மறவாதே! நன்மை இது தீமை இது எனப் பகுத்தறியும் குணம் உனக்குக் கடவுள் கொடுத்திருக்கிறார் என்பதை உணர்வாய். தீயவை செய்வதற்காக உன்னைக் கடவுள் சிருஷ்டித் திருக்கிறார் என்றெண்ணாதே. நன்மை செய்யவே உன்னை யுண்டாக்கி யுள்ளார் என்பதற்குப் பல வித அத்தாட்சிகளுண்டு. நீ நன்மையைச் செய்ய முற்படுவாயாகில் உலகம் உனக்கு உதவி செய்யும். உனது வாழ்க்கையைப் புனித மானதாய் நடத்திவா? அப்பொழுது கடவுளுடைய அனுக்கிரகமும் உனக்கேற்படும்.

உலகமே ஓர் பெருங் கடல். அதில் நீ ஓர் கப்பல். அக் கப்பலை ஓட்ட உன் மனமே ஓர் திசையறி கருவி. அக்கருவி எப்பொழுதும், நன்மையிது தீமை இது வெனக் காட்டி நீ சேர வேண்டிய துறைமுகத்திற்கு யாதொரு தீங்கும் ஏற்படாமல் கொண்டு சேர்க்க வழிக்காட்டும். இக்கருவியின் முள் நியா

யமாய்க் காட்டும் திசையை விட்டு, முன்னே பல வந்தமாய் வேறு பக்கம் காட்டு வித்து உன் கப்பல் ஓட்டினால் நீ நினைத்த இடம் போய்ச் சேர்வது எப்படி? அது போல்

உன் மனச் சாட்சி சொல்லுவதைக் கேளாமல், மனச் சாட்சிக்கு விரோதமாய் நடக்க நீ எண்ணு வாயாகில் உனது காரியம் எவ்விதம் கைக் கூடும் எனக் கருதுகிறாய்? பண ஆசை என்னும் கயிறு கொண்டு உன் மனச் சாட்சியைக் கட்டு வித்து, தீயன செய் வாயாகில் கடவுளுடைய கருணை உனக் கெவ்விதம் எனக் கருது கிறாய்?

உனக்கு பெருஞ் சம்பளம் வருகிறதே என எண்ணலாம். உன் வியாபாரத்தில் ஏராளலாபம் வருகிறதே எனக் கருதலாம். எனக்கு இத்தொழில் தவிர வேறு தொழில் தெரியாதே என் செய்யலாம்! என்று சொலலக் கூடும். நான் இதைச் செய்யா விட்டாலும் வேறு யாராவது இதனைச் செய் வார்கள் தானே என்று நீ நினைக்கக் கூடும். இவ்வித காரணங்கள் எல்லாம் உன்னைத் தீய வழிக் குத் திருப்ப வேண்டாம்.

உனக்குப் பெரும் ஊதியம் கிடைப்பது உண்மை. பணம் சம்பாதிப்பதே உனது வாழ்க்கையின் லட்சிய மல்ல. பணம் என்னும் ஆகாரத்தைக் கண்டு தூண்டில் முள்ளில் போய் சிக்கிக் கொள்ளாதே. பிறரை ஏமாற்றித், துன்புறுத்தி உனது பணம் சேகரிக்கப் படுகிறதா? நீ உனக்காகத் துன்புறுத்தா விட்டா



லும், ஏமாற்று விட்டாலும், உனது முதலாளிக்காக நீ செய்ய வேண்டி யிருக்கிறதா என்பதையும் யோசி.

பிறருடைய சுதந்திரத்திற்கோ அல்லது, அவர்களுடைய உரிமைகளுக்கோ பாதிக்கக் கூடியதா யிருந்தால் அந்த வருமானம் பெரிதென் றெண்ணாதே! அவ்விதம் சம்பாதித்த பணத்தில் பிறருடைய ரத்தம் பூசப் பெற்றிருக்கிறது என்பதை உணர்வாய். உனது பணம் அழுக்கடைந் துள்ளது என்பதையும் அறிவாய். எப்படிக் கிடைத்தால் என்ன? பணம் இருந்தால் போதும் எனக்கருது வாயானால் உனது வாழ்க்கையில் நீ தோல்வி யடைந்த வனாவாய். நீ கோடீஸ்வரனாகலாம். நீ பெரிய மனிதனாக முடியாது.

பண முடையவர்களைப் பணக்காரர் என்று சொல்வார்கள். 7 அடி உயரமுள்ளவனை நெட்டையன் என்பார்கள். சரீரம் பெருத்திருப்பவனை தடியன் என்பார்கள். படித்தவனைப் படிப்பாளி என்பார்கள். கால் பெருத்தவனை யானைக்காலன் என்பார்கள். இவர்களைப் பெரிய மனிதர் என்று ஒருக்காலும் உலகம் சொல்லாது. பெரிய மனிதனாவதற்கு வேறு குணங் கள் இருக்க வேண்டும். பெரிய மனிதன் என்று ஒருவரைச் சொல்ல வேண்டுமானால் அவருக்குப் பொருள் வேண்டுமென்ப தில்லை. நிலம் வீடுகள் முதலிய வேண்டுமென் பதில்லை. அவருடைய தூயகுணத் திற்றான் பெரிய மனிதத் தன்மை யடங்கி யிருக்கிற தென்பதை நீ உணர வேண்டும்.

இத்தொழிலை நான் செய்யாவிட்டால் வேறு யாராவது செய்ய மாட்டார்களா? என்று சொல்லிக் கொண்டு நீ அதனைச் செய்ய முற்படாதே! பிறர் செய்ய முன் வந்தால் அவர்கள் செய்யட்டும். இதைவிட உயர்ந்த வேலை உனக்குண்டு. கேவலமான வேலை செய்து பிழைக்கும் படியோ, பிறரைத் தூற்றியோ, பொய் சொல்லி ஏமாற்றியோ பிழைக்கும் படியோ உன்னைக் கடவுள் சிருஷ்டிக்க வில்லை என்று நீ திட்டமாய் நம்பு. நீ வேறு தொழில் செய்தால் அதில் விருத்தி யடைவாய் என்பது நிச்சயம்.

“எனக்கு இத்தொழிலைச் செய்யப் பிரியமில்லை எனினும் சிலகாலம் இதைச் செய்து கொஞ்சம் பொருள் தேடிக் கொண்டு வேறு தொழில் செய்யலாம் என எண்ணிக் கொண்டிருக்கிறேன்” எனச் சொல்லாதே. கெட்ட தொழில் செய்து நல்ல பணம் சம்பாதிக்கலாம் என நினையாதே. தொழில் முறையைச் சீர் திருத்திப் புனித மாக்கலாம் என்றும் எண்ணாதே. வெகுகாலம் இதே தொழிலைச் செய்வதால் நன்மை தீமை என்ற வித்தியாசமும் உனக்குத் தெரியாமற் போய்விடும். அது மாத்திரமல்ல. அதில் வரும் வருமானத்தின் மேலுள்ள ஆசை காரணமாய் மனச் சாட்சி மழுங்கி விடும்.’ தொழில் கெடுதியுள்ள தெனினும் அதற்குத் தக்க ஊதியம் இருக்கிறதே என்ற எண்ணமும் தோன்றும். தொழிலில் உழன்று வேறு



தொழில் செய்ய வகை யறியாமலும் நீ உன் தொழிலுக்கு அடிமையாகி விடுவாய். ஆகவே உன் மனச் சாட்சி எப்பொழுது தடுக்கிறதோ அப்பொழுதே அதனை நிறுத்தி விடு.

வேறு தொழில் செய்யத் தெரியாதே என்ற கவலை வேண்டாம். உன் மனச் சாட்சிக்கு விரோதமான தொழில் செய்ய உனக்குப் போதிய திறம் இருக்கும் சமயம், உனக்குத் தக்க தொழில் செய்ய முடியாதென்று கருதுகிறாய்? உன் மனதிற் கிசைந்த தொழில் பன் மடங்காய் செய்யக் கூடும் என்பதைத் திட்டமாய் நம்பு.

உன்னுள் உள்ள துர்க் குணங்களை விருத்தி செய்யக் கூடிய தொழிலை ஒருக் காலமும் நீ செய்ய எண்ணாதே. அது உனது அபி விருத்திக்குக் கெடுதி பயக்கக் கூடியது. உன் உதர நிமித்தம் தினந்தோறும் சொல்லும் பொய்கள், செய்யும் அக்கிரமங்கள், உன்னிலுள்ள நற்குணங்களை அழித்து விடும். உன்னுடைய மனித குணம் நீங்கி மிருக குணம் பேவிடும். .

உலகத்தில் எவ்வளவோ தூய வேலைகள் இருக்கையில் நீ அவற்றையெல்லாம் விட்டு உன் மனச்சாட்சிக்கு விரோதமாகவும், புனித மில்லாததுமான தொழிலை ஏன் மேற்கொள்ள வேண்டும் என்பது விளங்க வில்லையா? தற்பொழுது மேற் கொண்டுள்ள தொழிலை விட முடியாது என நினைக்கிறாயா? உன்னைச் சுற்றிலு முள்ளவர்கள் லட்சக் கணக்காய்ப் பொருள் தேடுகையில் தீயது, நல்லது என்று பகுத் தறிந்து பொருள் சம்பாதிக்

காதிருப்பானேன்? எனக் கருதுகிறாயா?

"ஒரு பொய் சொன்னால் இன்று 10,000 ரூபாய் கிடைக்கும்" என்ற நிலைமை யிருக்கையில், உண்மையே பேசுவேன் என்று சபதம் கூற ஒருவனுக்கு அளவில்லா தைரியம் அவசியம் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியதே! ஏராளமான லஞ்சம் வாங்கி ஓர் தப்பான காரியம் செய்து அதனை மறைத்துக் கொள்ளக் கூடிய வசதி இருக்கும் காலத்தில், லஞ்சம் வாங்காதிருப்பதற்கு சுத்த வீரத் தன்மை அவசியம் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியதே. பணக்காரர்களை யண்டி பஞ்சேந்திரங்களையும் அடக்கிப் பொருள் தேடுவது எளிதா யிருக்கையில் என் மனச் சாட்சிக்கு விரோதமாய் அவ் வேலை செய்யமாட்டேனென்ன திடபுத்தியுடன் தலை நிமிர்ந்து நிற்பது சிரமந்தான்.

அநேகர் யோக்கியன் என்ற பட்டம் பெற்றிருக்கிறார்கள் திருடுவதற்கு வசதியில்லாத விடத்தில் யோக்கிய முள்ளவனாக விருக்கலாம். தினந்தோறும், கணக்குப் பரிசோதனை நடைபெற்று வரும் இடத்திலுள்ள ஓர் கணக்கன் பணம் திருடாதவனா யிருக்கலாம். அந் நிலைமையில் உள்ளவர்களை நாணயஸ்தன் என்று சொல்லி விட முடியுமா?

காசு திருடக் கூடிய வசதி யுள்ள இடத்தில் உள்ளவன் திருடாமல் ஒழுங்காய் இருப்பானே யானால் அவனை சுத்தவான் எனச் சொல்லக்கூடும். அது போல் அவனவ னிருக்



கும் நிலைமையில், தான் செய்யும் அநீதமான காரியங்கள் வெளிவராதிருக்கும் நிலைமையிலும், அதனால் ஊதியம் கிடைக்கும் நிலைமையிலும் உள்ள நீ, மனச் சாட்சிக்குப் பயந்து நடந்தால் தான் உன்னை சத்தியவான், பெரிய மனிதன் எனச் சொல்ல முடியும். கையிலுள்ள பணத்தைக் கொண்டு ஒருவனைப் பெரிய மனிதன் என்று சொல்லும் இவ்வுலகத்தில் பணமில்லாது நான் என் செய்யலாம் என்று திகைத்து நிற்காதே!

அவசியமானால் கிழிந்த கந்தைகளைக் கட்டிக் கொள். ஒரு வேளை ஆகாரம் சாப்பிடு. உன் வீட்டில் அழகிய ரத்தினக் கம்பளங்களும், மேசை நாற்காலிகளும் தேவை யில்லை. எவ்வளவு கஷ்டங்கள் வந்த போதிலும், நியாய வரம்பு மீறி நடவாதே! அநீதமான காரியங்களுக் குடன் படாதே! நிலத்தை வெட்டிக் கொத்திப் பயிர் செய். கூலி வேலை செய். இவற்றால் உனது உயர் குணம் குறைந்து போகாது. உன்னுடைய யோக்கியதையை, சுய மரியாதையை ஒரு நாளும் குறைத்துக் கொள்ளாதே; உன் மனச் சாட்சியை விற்று விடாதே. பணத்தை எண்ணி உன்னுடைய யோக்கியதையைக் குறைத்துக் கொள்ளாதே. பணம் வரும், போகும்; நீ பாடு பட்டுத் தேடிய யோக்கியதையை மாத்திரம் உன் உயிர் போயினும் விட்டு விடாதே!

அருகல தாகிப் பல பழுத்தக் கண்ணும்
பொரிதாள் விளவினை வாவல் ---- குறுகா

பெரிதணிய ராயினும் பீடிலார் செல்வம்
கருதுங் கடப்பாட்ட தன்று (நாலடியார்)

அள்ளிக்கொள் வன்ன குறுமுகிழ வாயினுங்
கள்ளிமேற் கை நீட்டார் சூடும்பூ - வன்மையால்
செல்வம் பெரிதுடைய ராயினுங் கீழ்களை
நள்ளா ரறிவுடையார். (நாலடியார்)

நச்சப் படாதவன் செல்வம் நடுவூரு
ணச்சு மரம் பழுத்தற்று. (குறள்)

அன்பொரீ இத்தற் செற்றற நோக்கா தீட்டிய
வொண் பொருள் கொள்வார் பிறர். (குறள்)

## 10வது - அத்தியாயம்.

## வெற்றி பெற்ற முறை

உலகத்தில் தன் வாழ்க்கையில் வெற்றிபெற உழைப்பவர்களை இருபகுதியாகப் பிரிக்கலாம். பணமே பிரதானம் எனவதனைச் சேகரிப்பவர் ஒரு சாரார். பணம் பெரிதல்ல, தனது வாழ்க்கையைப் புனிதமாக்கி உயர்த்த வெண்ணுபவர் மற்றோர் சாரார். பணத்தையே பெரிதாகக் கருதியவர்கள், எத்துறையில் உழைத்த போதிலும், எம்முறையைக் கொண்ட போதிலும், பொருளே பெரிதெனக் கொண்டு மற்றெல்லாவற்றையும் விட்டுத் தேடுபவர் அவர்களே. பொருள் தேடாதவர்களையும், பொருள் இல்லாதவர்களையும் கண்டு இகழும் குணம் கொண்டவர்களா யிருப்பார்கள். தங்களுக்குக் கிடைக்கும் பணம் நியாய முறையில் வருகிறதா பிறருக்குச் சேரவேண்டிய பணம் தன்னுடைய சூழ்ச்சிகளால், கேவலமான முறைகளால் சேர்க்கப் பெற்றனவா வென்றுங் கருதார்கள்.

ஆனால் மற்றவர்களோ, தங்களுக்குப் பணம் கிடைத்தாலும், கிடைக்கா விடினும், எற்குந் தொழில் நியாய முள்ளதாய் பிறர்க்கு உபயோக முள்ளதாய், நன்மைக்கானதாய் இருக்கிற

தா வென்பதையே பெரிதுங் கவனிப்பார்கள். தங்களுடைய வாழ்க்கையில் வரும் பொருள் தூயவழியில் வருகிறதா, அல்லது பிறர்க்குரியதை அபகரிக்கிறோமா, அல்லது பிறரைக் கஷ்டப் படுத்தித் துன்புறுத்தித் தனக்குப் பணம் வருகிறதா என்பதை யோசிப்பார்கள். அவ்விதம் அவர்கள் யோசித்து யோசித்துத் தொழில் செய்து பெரும் பொருளையீட்ட முடியாத காரணத்தால், அவர்கள் தொழிலில் தோல்வி யடைந்தார்கள் என்றே உலகம் சொல்வதைக் காண்கிறோம். ஆனால் அறிவுள்ள உலகம் அவ்விதம் கருதுவதில்லை என்பது திட்டம்.

சமீபகாலம் வரையில் பெருங் கோடீஸ்வரர்கள் என்று கருதப் பெற்றவர்களும், பெரும் யோக்கியர்கள் நாணயஸ்தர்கள் என்றும் கருதப்பட்டவர்களும் பொதுஜனங்களைப் பலவித சூழ்ச்சிகளால் ஏமாற்றினார்கள் எனக் குற்றம் சாட்டப்பெற்றுத் தண்டனை யடைந்திருக்கிறார்கள் என்பதைக் கவனிக்குங் காலத்தில் பணம் சம்பாதித்தவர்களின் இரகசிய முறைகளை நாம் சற்று விசாரிக்கவேண்டியவர்களாக விருக்கிறோம்.

பிறநாட்டிலுள்ள கோடீஸ்வரர்களைப் பற்றி நாம் கவனிக்கத் தேவையில்லை. நமது நாட்டில் பெரும் பணக்காரர்கள் எனக் கருதப் பெற்றவர்களைப் பற்றி ஆராய்வோம். கஞ்சா, அபின் போன்ற லாகிரி வஸ்துக்களை இரகசியமாய் வியாபாரம் செய்து தேடிய பொருளில் ஒரு பகுதியைக் கோவில்களும்



பள்ளிக்கூடங்களும் கட்டுவதிலும், மற்றும் உயர்தர உத்தியோகஸ்தர்களையும் வரவேற்று பட்டம் பெறுவதிலும் செலவு செய்து மதிப்புப் பெற்றுத், தனது இழி தொழிலுக்கு அந்த மதிப்பையே ஆதாரமாகக் கொண்டுமென்மேலும், அதிக வருமானம் தேடுவது ஆராய்ந்தால் வெளியாகும்.

கொடுக்க வேண்டியவர்கட்குக் கணக்குத் தீர்ப்பதாக பத்திரத்தைக் கொண்டு வரச் செல்லி அதைப் பார்ப்பதுபோல் வாயில் போட்டு மென்று முதலாளி யானதும் வெளியாகும். நகை திருடும் குறவர்களை சிநேகம் செய்து கொண்டு அவர்கள் திருடிக் கொண்டு வந்து விற்க வழியில்லா திருக்கும் நகைகளை உருக்கித் தன் செல்வாக்கு மூலம் செல்வம் சேர்த்திருப்பவர்கள் எவ்வளவு பேர்?

100 ரூபாய் கடன் கொடுத்து 1000 ரூபாய்க்கு வழக்குப் போட்டுவசூலித்துப் பணக்காரர்களாகுபவர் எவ்வளவு பேர்? இவர்கள் செய்வது குற்றமுள்ளவை யென்பது அவர்கட்குத் தெரியாமலில்லை. திருடியவன் அகப்பட்டுக் குற்றவாளி என்று கண்டு பிடிக்கப் பெறும் வரையில் அவர்கள் யோக்கியர்கள் எனவே கருதப் படுவார்கள் என்பதற் கையமில்லை. கண்டுபிடிக்கப் பெறாத யோக்கியர்கள் பெரும்பான்மையோர்.

இத்தகை யோர்களிடம் பணம் சேர்ந்துவிடும் பட்சத்தில் பணமுள்ளவர்கள் பொய் சொல்ல மாட்டார்கள், மோசம் செய்

ய மாட்டார்கள் என்பதாக அவர்களுடைய பொருளைக் கொண்டே விளம்பரம் செய்து கொள்வார்கள்.

சற்று ஊன்றி ஆராயுமிடத்தில்சிலர் பெற்றுள்ள, சங்கைக்கும், அவர்களது நடத்தைக்கும் சம்பந்தமில்லாதிருக்கிறது. சரீரத்திற்குள் இருக்கும் வியாதியை எக்ஸ்ரே என்னும் வெளிச்சம் கொண்டு பார்ப்பதுபோல் பார்த்து ஆராயுஞ் சமயம். பெரும் நியாயவான், புண்ணிய சீலன், தூயகுணம் படைத்தவன் என உலகத்தவர் எண்ணி வந்தவர்களுடைய கீர்த்தியெல்லாம் சூரிய வெளிச்சத்தைக் கண்ட பனியைப்போல் நீங்கி விடுவதைக் காண்போம்.

ஆயிரக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள ஓர் வைரக்கல்லில் ஓர் சிறு கரும்புள்ளி யிருக்குமாயின் அதற்கு மதிப்பில்லாமற்போய்விடுவது போல் ஒருவன் எவ்வளவு பணமுள்ளவனாகவிருந்த போதிலும் சரி, எவ்வளவு பட்டங்கள் உள்ளவனெனினும் சரி, அவனுடைய வாழ்க்கையில் ஓர் கரும்புள்ளி யிருக்குமாயின் எல்லாம் பழுது பட்டதாகிவிடும். அவனிடம் பணம் உள்ளவரையில் முதலாளி முதலாளி என்பார். அவனிடம் பணம் வாங்கும் நோக்கம் உள்ளவரையில் அவனைப் புகழ்வார். காரியம் முடிந்ததும், அவன் செய்தி தெரியதோ என்று சொல்லிப் போவார். இதுவே உலக இயல்பு.

வைரங்களில் கரும்புள்ளி யிருப்பதும் சாதாரண கண்க



ளுக்குத்தெரியாமல் இருக்கும். அதுவரையில் அதன் உருவையும், ஒளியையும் கவனித்து இது 5000 பொறுமதியுள்ளதாயிருக்கும்1000 பெறுமதியுள்ளதாயிருக்கும் என்று பேசிக் கொண்டிருப்பார்கள். ஆனால் பூதக்கண்ணாடி என்னும் கருவியால் வைத்துப் பரிசோதிக்குங் காலத்தில் அதிலுள்ள கரும்புள்ளி வெளியாகி மதிப்பற்றதாகி விடுகிறது. கோடீஸ்வரர்கள் என்று கருதப் பெற்று அமெரிக்கா நாட்டில் நிர்வாகசபை அங்கத்தவர்களாயிருந்த சிலர் சமீப காலத்தில் லட்சக் கணக்கான தொகைகளைமோசம் செய்த குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட வில்லையா? சமீபத்தில் இங்கிலாந்தில் லாட்பட்டம் பெற்றவரும், சர்பட்டம் பெற்றவர்களும் பொது ஜனங்களை ஏமாற்றிய குற்றத்திற்காகத் தண்டிக்கப் பெறவில்லையா?

இந்தியாவில் அவ்விதம் எவ்வளவோ சம்பவங்கள் நாம் பார்த்திருக்கிறோம். பெரும் பணம் படைத்தவர் படிப்புள்ளவர்கள், பேராசை காரணமாய், சீக்கிரம் பணக்காரர்களாக வேண்டும் என்ற ஆசை காரணமாய் தனக்குச் சம்பந்தப் படாத பணங்களைக் கையாடியும், பிறர் சொத்துக்களை அபகரித்தும் தண்டிக்கப் பட வில்லையா?

கொஞ்ச காலத்திற்கு முன்தான் அவர்களைப் பொது ஜனங்கள் வெகுவாய் வாழ்த்தியதையும் நாம் அறிவோம். அவர்கள் கூட்டம் கூட்டினால் ஏரான ஜனங்கள் கூடியதையும் பார்த்

தோம். அவர்களுடைய நட்பைப் பெறுவது பெரும் பாக்கியம் என ஜனங்கள் எண்ணியதும் நமக்குத் தெரியும். அவர்களைப் பற்றிய உண்மைச் சரித்திரம் வெளியான வுடன் அவர்கள் இருந்த விடம் தெரியாமற் போய் விடவில்லையா?

தான் பெறற் குரிய பொருள் பொருளைத் தவிர வேறில்லை என்ற எண்ணம் எவனுக் கிருக்கிறதோ அவனை மனிதன் என எவ்விதம் கருத முடியும்? எது நித்தியமானது எது அநித்தியமானது என்ற பகுத்தறிவு அவனுக் கில்லை யென்றே நாம் கருத வேண்டி யிருக்கிறது. நல்ல வழியில் தேடப் படாத பொருள் ஒருவனிடம் எவ்வளவு இருக்கிறதோ அதற்குத் தக்க விதமாய் உலகம் அவனை இகழ்ந்தே பேசும் என்ப துண்மை.

நீ பொருள் தேடினாலும் சரி, தேடா விட்டாலும் சரி, நீ லாபம் அடைந்தாலும் சரி, இல்லா விட்டாலும் சரி உன்னை மனிதன் என்று அழைக்கும் படியான நிலைமையில் நீ இருக்க வேண்டும். அதனையே உலகம் உன்னிடத்தில் எதிர் பார்க்கிறது.

விலை கொடுத்து வாங்க முடியாத குணம் உன்னிடம் உண்டென்பது உலகம் அறிய வேண்டும். அப்பொழுது தான் உலகம் உன்னை மனிதனாகக் கருதும். உன்னைப் பணங் கொடுத்து வாங்கலாம், பணங் கொடுத்து உன் மனச் சாட்சிக்கு விரோத மான காரியத்தைச் செய்யச் சொல்லலாம்



என்று உலகம் நினைக்கக் கூடிய நிலைமையில் நீ நடக்காதே.

நீ எந்தத் தொழிலில் வெற்றியடைய வேண்டினும் மேற் சொல்லிய குணம் உன்னிடம் இருப்பதாக உலகம் அறிய வேண்டும். நீ வக்கீல் தொழிலை ஏற்பதற்கு நீயும் மனிதன், உன்னைப் பிறர் வாங்க முடியாது என்ற நம்பிக்கைப் பிறருக்கு ஏற்பட வேண்டும். நீ பெரும் சட்ட நிபுணராக விருக்க வேண்டும் என்பதில்லை. ஆனால் இவரிடம் நமது வழக்கைக் கொடுத்தால் எதிர்க் கட்சி யாரிடம் காசு வாங்கிக் கொண்டு நமது கட்சியைக் கெடுத்து விட மாட்டார் என்ற நம்பிக்கை உலகத்தாருக்கு ஏற்பட வேண்டும்.

அது போல் ஒரு வியாபாரிக்கும் பெயர் ஏற்பட வேண்டும் அவன் பணக் காரனா யிரா விட்டாலும் பாதக மில்லை. அவன் சொல்லும் வார்த்தைகள் உண்மையானவை, அவன் சொல்லுகிற படி சாமான்கள் இருக்கும், சொல்லுகிற படி நடப்பான் என்ற நம்பிக்கை ஏற்படுமானால் அவன் வியாபாரத்தில் வெற்றியே அடைவான் என்பதற்கைய மில்லை. நீ பணத்தை விட பெரியவன், பணத்தாலும் வாங்கப் பட மாட்டாதவன் என்ற பெயரை நீ தேட முயலுவாய்.

தற் சமயம் உயர் பதவியுள்ள அநேகர் தங்கள் நிலைமையைப் பற்றிக் கவலை கொண்டவர்களாய், தங்கள் உள் ரகசியம் எச்சமயம் வெளி வந்து விடுமோ வென்று பயந்த வர்களாய்க்

காலந் தள்ளுவதைப் பார்க்கலாம். தங்கள் உள் ரகசியம் வெளிவராமல் இருக்க வேண்டி பணம் செலவு செய்து தங்கள் சரித்திரத்தை மூடிக் கொண்டே வருவார்கள். தனக்கு எதிரியாய் வரக் கூடியவன் என்று தெரிந்தவுடன் பண மிருந்தால் பணங் கொடுத்து வாங்கித் தன்னிடம் சேர்த்துக் கொள்ளவோ, அல்லது தன் வழியில் நில்லாது வெகு தூரத்தில் கொண்டு தள்ளவோ வழி தேடுவார்கள். புயலடிக்கும் நேரம் ஓர் பெரிய முருக்கை மரத்தின் சிறு கிளையில் உட்கார்ந்து கொண்டிருப்பவன் எவ்விதக் கனவு கண்டு வருவானோ அவ்விதக் கனவு கண்டு கொண்டு வரும் அநேகரை நமது அரசியல் துறைகளில் காணலாம்.

சில காலத்திற்குமுன் ஓர் மகாசபையின் தலைமை ஸ்தானத்திற்கு அபேக்ஷகரா யிருந்த ஒருவரிடம், அவர் எப்பொழுதோ எழுதிய கடிதம் ஒன்று அகப்பட்டிருப்பதாகவும், அக்கடிதம் வெளியிடப் படுமாயின் அது அவருடைய ஸ்தானத்திற்குப் பாதகம் ஏற்படும் என்றும் ஒருவன் சொன்னானாம். அதற்கு அவர் 'நான் கண்டு வெட்கப் படக்கூடிய நிலைமையில் ஒரு காரியத்தையும் எச்சமயமும் எழுதவில்லை அதுபற்றி கவலையில்லை' என்று சொன்னாராம்.

அந்நிலைமையிலுள்ளவர் எவ்வளவுபேர் அரசியலிலும் சரி மற்ற வேறு தொழில்களிலும் இருக்கிறார்கள் எனக் கருது



கிறாய்.

ஒருபொய் சொன்னால் எவ்வளவோ சுகம் அனுபவிக்கலாம் என்றிருந்தும் அரிச்சந்திரன் பொய் சொன்னாரா? இல்லையே. தன் கஷ்டத்தையும் பொருளையும் அவர் பெரிதாகக் கருதினாரா. பணத்தைவிடப் பன்மடங்கு உனது நற்பெயரே பெரிதென்று கருதுவாயாக. உலகத்திற்கும், உனக்கும் நீ செய்து கொள்ளக் கூடியது என்ன வென்று எண்ணுகிறாய்? இவனும் மனிதன், பணத்தையல்ல, உண்மையையும், நன்மையையுமே மதித்து வந்தான் என்ற பெயர் எடுப்பதே! இதுவே உனது லட்சியமாக விருக்கட்டும். அயோக்கியன், தீயன் என்ற பெயர் கொண்டு கோடீஸ்வரனா யிருப்பதை விட, யோக்கியன், நெறி தவறாத உத்தமன் என்ற பெயர் எடுத்து ஏழையாய் மறிப்பது பன்மடங்கு உயர்வானது என்பதைக் கைக்கொள்வாயாக.

இலங்கையில் வியாபாரம், தொழில் சம்பந்தமுள்ளோர்
எல்லோரும் வேண்டும் நூல்

இலங்கை

# வருமானவரிச் சட்டமும்
# கணக்குகள் தயாரித்தலும்

இலங்கையில் தற்சமயம் அமுலில் இருக்கும் வருமான வரிச் சட்டத்தின் மொழி பெயர்ப்பு, அதிலுள்ள கடினமான பாகங்களைப் பற்றி இன்கம்டாக்ஸ் கமிஷனராலும், மற்றும் சட்டநூல் வல்லார்களாலும் கொடுக்கப் பெற்ற வியாக்கியானங்கள், வருமான வரி சம்பந்தமாய் எவ்விதம் கணக்குகள் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதும், எப்படிக் கணக்குகளைத் தயார் செய்ய வேண்டும் என்பதும், இலங்கையில் நடைபெறும் தொழில்களுக்குத் தக்கவாறு கணக்குகள் எவ்விதம் வைத்துக் கொள்வது என்ற விவரங்கள் யாவரும் அறிந்து கொள்ளக் கூடிய விதமாய் எழுதப் பட்ட நூல் — சுமார் 350 பக்கங்களுக்கு மேலுள்ளது. விலை ரூ 3

ஆசிரியர்:- கோ. கடேசய்யர்.

கிடைக்குமிடம்:-

சகோதரி பிரஸ்,
அட்டன்.
(சிலோன்)